# சுபீட்சம்

SUPEEDSAM
EVERYTHING FOR PEOPLE
அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே



சுபீட்சம் மின்னிதழை பார்வையிட www.supeedsam.com

செவ்வாய்க்கிழமை 15.08.2023 supeedsam.com supeedsam@gmail.com


# சமஷ்டி அடிப்படையில் தான் தமிழருக்குத் தீர்வு
# மாகாண சபைத் தேர்தலுடன் முழுமையாக 13 அமுல்!



## சம்பந்தன் ஜனாதிபதிக்கு கடிதம்

'சமஷ்டிக் கட்டமைப்பிலேயே அர்த்தமுள்ள எந்தத் தீர்வும் சாத்தியம் என்ற நிலைப்பாட்டில் வேறு சமரசம் அல்லது விட்டுக் கொடுப்புச் செய்து கொள்ளாமல் – அரசமைப்பில் மாகாணங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களையும் விரைவாக நடைமுறைப்படுத்தவும் – நீண்டகாலமாக இழுத்தடிக்கப்பட்ட மாகாண சபைத் தேர்தலை நடத்தவும் – நாம் விவரித்துள்ளபடி, தமிழ் மக்களின் அபிலாஷைகளின் அடிப்படையிலும் மற்றும் தொடர்ந்து வந்த அரசுகளால் தீர்வுக்காக வழங்கப்பட்ட பல்வேறு உறுதிமொழிகளுக்கு

02 ஆம் பக்கத்தில்...

## தமிழர்களின் தலைகளை களனிக்கு கொண்டு வருவேன்
## மேர்வினுக்கு தமிழ் தரப்பு கடும் கண்டனம்



தமிழர்களின் தலைகளை களனிக்கு கொண்டு வருவேன் என பகிரங்கமாக கூறும் அரசியல்வாதிகளை கைது செய்ய வேண்டும் என ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் அமைப்பாளர் அகத்தியர் அடிகளார் தெரிவித்தார்.

நான் வடக்கு, கிழக்குக்கு வருவேன், நீங்கள் விகாரைகளை தடுக்க முற்பட்டால், மகா சங்கத்தினர்மீது கை வைக்க முயன்றால் நான் களனிக்கு சும்மா திரும்பி வரமாட்டேன், உங்களின் தலைகளைகையில்

02 ஆம் பக்கத்தில்...

## செஞ்சோலை படுகொலை நினைவேந்தல்: உயிரிழந்த மாணவிகளுக்கு மக்கள் அஞ்சலி





செஞ்சோலை படுகொலையின் 17ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று நடைபெற்றது.

யாழ்ப்பாணம் - வல்வெட்டித்துறையில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது எம்.கே. சிவாஜிலிங்கம் உயிரிழந்த மாணவிகளுக்கு சுடர் ஏற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்.

02 ஆம் பக்கத்தில்...

## இன,மத குரோதத்தை பரப்பும் மேர்வின் மனநலம் பாதிக்கப்பட்டவர்

தமிழரின் தலையை கொய்து வருவேன் என கொக்கரிக்கும் மேர்வின் சில்வாவுக்கு தலையில் சுகமில்லை என்பது நாடறிந்த சங்கதி என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...



## தமிழர்களின் வீர வரலாறுகளை மேர்வின் சில்வா, சரத் வீரசேகர போன்றவர்கள் அறிந்து கொள்ள வேண்டும்

தமிழர்களுக்கென பல தனித்துவமான வீரவரலாறுகள் உள்ளதெனவும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் எத்தகைய வீரன் என்பதை இந்த முழு உலகும் அறியும் எனவும் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

மேர்வின் சில்வா தமிழர்களின் தலைகளை களனிக்கு எடுத்துச்

02 ஆம் பக்கத்தில்...



## இந்த நேரத்தில் 13 பற்றி பேசக்கூடாது!
## மஹிந்தவின் கருத்தும் அதுதான்
### பொதுஜன பெரமுன கட்சியின் செயலாளர் நாயகம் சாகர

(சில்மியா யூசுப்)

அரசாங்கத்தின் அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தை அமுல்படுத்துவது தொடர்பில் தற்போதைக்கு விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என பொதுஜன பெரமுன கட்சியின் செயலாளர் நாயகம் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

கட்சியின் இந்த நிலைப்பாடுதான் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நிலைப்பாடு எனவும் அவர் தெரிவித்தார்..

02 ஆம் பக்கத்தில்...


"சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்"

aaDaa Finance 0798000100

Aadaa Finance GmbH



Dr.(h.c) Nageswaran Arulrasa D.Litt
CEO
Eidgenössische Finanzmarktaufsicht Nr:35302
Fachmann für versicherung & vorsorge
Hauptstrasse 54
6015 Luzern
Switzerland
079 8000 100
arulnages@yahoo.com
finma 34598
25605: cicero

MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்

MBZ

கல்வியே துணை
பள்ளித் தலமனைத்தும் பேறெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM

S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com

Mathe மகேந்திரா-வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen

# தேசிய ரீதியில் சாதனை படைத்த ஜினோதிகா: சம்மாந்துறை வலய வரலாற்றில் முதல் சாதனை

**( வி.ரி.சகாதேவராஜா)**

கல்வி அமைச்சு நடாத்திய சர்வதேச ஒலிம்பியாட் கணித போட்டியில் தேசிய மட்டத்தில் கிழக்கு மாகாணத்தின் சம்மாந்துறை வலயத்துக்குட்பட்ட மல்வத்தை விபுலானந்தா மகா வித்தியாலய மாணவி செல்வி சிவரூபன் ஜினோதிகா தங்கப் பதக்கம் பெற்று மகத்தான சாதனை படைத்துள்ளார்.

நேற்று (14) திங்கட்கிழமை மாலை இப் பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டன.

கடந்த வாரம் கொழும்பு ஆனந்தா கல்லூரியில் நடைபெற்ற தேசிய போட்டியில் யாழ்ப்பாணம் அளவெட்டி அருணோதயம் வித்தியாலய மாணவன் ஆர்.ஆருஜன் 50 புள்ளிகளை பெற்று முதலிடத்தையும் தங்கப்பதக்கத்தையும் சுவீகரித்தார்.

45 புள்ளிகளைப் பெற்று கிழக்கு மாகாணத்தின் சம்மாந்துறை வலயத்துக்குட்பட்ட மல்வத்தை விபுலானந்தா மகா வித்தியாலய மாணவி செல்வி சிவரூபன் ஜினோதிகா தங்கப் பதக்கம் பெற்று இரண்டாம் இடத்தில் மகத்தான சாதனை படைத்துள்ளார்.



இது சம்மாந்துறை வலயத்தில் சர்வதேச ஒலிம்பியாட் சரித்திரத்தில் முதல் சாதனையாகும். அதுவும் ஒரு பின்தங்கிய பிரதேசத்தில் ஏழ்மையான சூழலில் இத்தேசிய சாதனை படைத்தது அனைவராலும் பாராட்டப்படுகிறது. வித்தியாலய முதல்வர் திருமதி கௌசல்யா ஞானேஸ்வரன் தகவல் தருகையில்.. மல்வத்தையில் மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்த இவர் மிகவும் கெட்டிக்காரி.

இவரது சாதனை தேசிய மட்டத்தில் மகத்தானது. உண்மையில் மகிழ்ச்சி.

இம் மாணவிக்கு ஆசி வழங்கி அறிவூட்டிய அனைவருக்கும் கணித பாட ஆசிரியர்கள் வலயக்கல்விப் பணிப்பாளர் மற்றும் கல்வி சார் உத்தியோகத்தர்கள்

ஏனைய ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கும் எமது பாடசாலை சமூகம் சார்பாக நன்றியினையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம். என்றார்.

சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா வாழ்த்துக்களை தெரிவித்தார்.

# எதிர்க்கட்சித் தலைவர் சஜீத் பிரேமதாஸ சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரிக்கு பஸ் வண்டிஅன்பளிப்பு

**(சம்மாந்துறை நிருபர்
ஐ.எல்.எம் நாஸிம்)**

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச ஐக்கிய மக்கள் சக்தியின் சம்மாந்துறை தொகுதி அமைப்பாளர் எம்.ஏ.ஹஸன் அலியின் வேண்டுகோளுக்கு அமைவாக சக்வல - பிரபஞ்சம் வேலை திட்டத்தின் கீழ் 75 ஆவது பஸ் வண்டி ஒன்றினை சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்திற்கு அன்பளிப்பு செய்யும் நிகழ்வு நேற்று (14) காலை 10.30 மணியளவில் சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

பஸ் வண்டியை சஜித் பிரேமதாஸ சம்மாந்துறை ஹிஜ்ரா பெரிய பள்ளிவாசல் சந்தியிலிருந்து செலுத்திக் கொண்டு வந்து குறித்த பாடசாலையின் வாசல் முன்றலில் நிறுத்தினார்.

எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஜவுக்கு முஸ்லிம் மத்திய மகா வித்தியாலய மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பொது மக்கள் அநோக வரவேற்பளித்தனர்.

இந்நிகழ்வில் ஐக்கிய மக்கள் சக்தயின் சம்மாந்துறை தொகுதி அமைப்பாளர் எம்.ஏ.ஹஸன்அலி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.மன்சூர், கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஐ.எல். எம்.மாஹீர் உட்பட கல்வி அதிகாரிகள், பிரதேச செயலாளர் உட்பட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

பிரதம அதிதி சஜித் பிரேமதாஸ, ஐக்கிய மக்கள் சக்தயின் சம்மாந்துறை தொகுதி அமைப்பாளர் எம்.ஏ.ஹஸன்அலி ஆகியோர்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதுடன் நினைவுப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

மாணவர்களின் நடனம் ஒன்றும் நடைபெற்றது. கல்லூரியின் அதிபர் திருமதி யு.என்.ஏ றஹீம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸா உரையாற்றுகையில்,

இப்பாடசாலையில் சுமார் 3,000 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்றுக் கொண்டிருக்கின்றார்கள். இவர்களின் போக்குவரத்து வசதியைக் கருத்தில் கொண்டு சுமார் ரூபா 50 இலட்சத்திற்கும் அதிகமான பெருமதியுடைய இந்த பஸ் வண்டியை இன்று நாம் கையளிப்பதில் பெருமை அடைகின்றோம்.

எமது இத்திட்டத்தின் கீழ் இதுவரைக்கும் பாடசாலையுடன் சேர்த்து 75 பாடசாலைகளுக்கு பஸ் வேண்டிகளை அன்பளிப்பு செய்திருக்கின்றோம் என்பதனையும் இங்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் 33 பாடசாலைகளுக்கு ஸ்மார்ட் போன் கணணி போன்ற நவீன டிஜிட்டல் கருவிகளையும் வழங்கி இருக்கின்றோம்.

அதேபோல் சுவாசம் என்கின்ற நிகழ்ச்சி திட்டத்தின் ஊடாக நாட்டில் இருக்கின்ற சுமார் இதுவரைக்கும் 56 வைத்தியசாலைகளுக்கு வைத்திய உபகரணங்களையும் வழங்கி இருக்கின்றோம்.

சம்மாந்துறை வைத்தியசாலைக்கும் சுமார் 30 இலட்சம் பெறுமதியான வைத்திய உபகரணங்களை நாங்கள் ஏற்கனவே வழங்கி இருக்கின்றோம்.

எமது கட்சியின் அமைப்பாளர் ஹஸன் அலி இப்பாடசாலைக்கு நவீன வசதிகளை உடைய கேட்போர் கூடம் ஒன்றை அமைத்து தருமாறு கேட்டு இருக்கின்றார். எமது ஆட்சி வருகின்ற போது நிச்சயமாக இந்த பாடசாலைக்குரிய கேட்போர் கூடத்தை அமைத்து தருவோம் என்பதனை இங்கு உறுதி கூறுகிறேன். அம்பாறை மாவட்டத்தில் இருக்கின்ற அம்பாறை பொத்துவில் கல்முனை சம்மாந்துறை ஆகிய தொகுதியில் வாழ்கின்ற மக்கள் எவ்விதமான வேறுபாடுகள் இன்றி ஒற்றுமையுடன் வாழ்ந்து கொண்டு வருகின்றார்கள்.

இன்று மதம், மொழி என்ற வேறுபாட்டை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். எமது ஆட்சி வருகின்ற போது மக்களிடையே எந்தவிதமான வேறுபாடு இன்றியும் நீதியான முறையில் மக்களை நடத்துவோம்.

அம்பாரை மாவட்டத்தில் காணப்படுகின்ற அனைத்து குறைபாடுகளையும் நாங்கள் அடையாளம் கண்டு அவற்றை நிவர்த்தி செய்வதற்குரிய நடவடிக்கைகளை எதிர்காலத்தில் மேற்கொள்ள இருக்கின்றோம்.

எமது ஆட்சி நிர்வாகத்தின் போது கல்வியில் மாற்றங்களை ஏற்படுத்த இருக்கின்றோம். மாணவர்களுக்கு நவீன டிஜிட்டல் கருவிகள் மூலம் கல்வியை மேற்கொள்வதற்குரிய அனைத்து நடவடிக்கைகளையும் அனைத்து பாடசாலைகளுக்கு ஏற்படுத்திக் கொடுக்க இருக்கின்றோம்.

இன்றைய ஆட்சியாளர்கள் மாணவர்களுக்கு அதிநவீன தொழில்நுட்பங்களின் ஊடாக கல்வியை மேற்கொள்வோம் என்று தெரிவித்துக் கொள்கின்றார்கள். ஆனால்




கொரோனா காலத்தில் மாணவர்களுக்கு பல்வேறு குறைபாடுகள் இருந்தது. மாணவர்களுக்கு கையடக்க தொலைபேசியில் இருக்கவில்லை. பல இடங்களில் தொலைபேசிக்கான சிக்னல் கூட காணப்படவில்லை. இவ்வாறான நிலைமைகளை நாங்கள் மாற்றி அமைப்போம் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

இன்று எமது பாடசாலைகள் நவீன தொழில்நுட்பத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றன. எனது தந்தையாகிய ரணசிங்க பிரேமதாஸ அவர்கள் பாடசாலையில் உள்ள சகல மாணவர்களுக்கும் இலவசமாக மதிய போசனத்தையும் வழங்கி வைத்திருந்தார். அதனை நிறுத்தியுள்ளார்கள். சீருடைகளையும் வழங்கியிருந்தார் மாணவர்களுக்கு இல்லாமல் செய்யப்பட்ட மதியபோசன வசதியினை நாம் ஆட்சிக்கு வந்தவுடன் எல்லா பாடசாலைகளுக்கும் ஏற்படுத்திக் கொடுப்போம்.

ஆட்சியாளர்கள் நாட்டின் சொத்துக்களை நாளாந்தம் விற்பனை செய்து கொண்டிருக்கின்றார்கள். சொத்துக்களை விற்றுதான் இந்த நாட்டை தற்போது நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். நாட்டில் காணப்படுகின்ற ஒவ்வொரு திணைக்களத்தினையும் தற்போது தனியார் மையப்படுத்திக் கொண்டு இருக்கின்றார்கள். இலங்கை ரூபவாஹிணி கூட்டுத்தாபனத்தின் அலைவரிசை ஒன்றினையும் தனியார்மைப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றார்கள். நாட்டை மிகவும் வங்குரோத்தான நிலைக்கு எடுத்துக் கொண்டு செல்கின்றார்கள். 79 லட்சம் மக்கள் வறுமை கோட்டுக்கு கீழ் வாழ்கின்றார்கள். இதற்கு இந்த அரசாங்கத்தினுடைய அசமந்தப்போக்கே காரணமாகும். எமது ஆட்சி வருகின்ற பட்சத்தில் நாட்டில் வாழுகின்ற ஒவ்வொரு மக்களுடைய வாழ்க்கையிலும் நல்லதொரு மாற்றத்தை நாங்கள் ஏற்படுத்துவோம் என்பதனை இங்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.

## இந்த நேரத்தில் 13 பற்றி பேசக்கூடாது!

**பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பில் கட்சி எடுத்த நிலைப்பாடு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஜனாதிபதிக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் எனவும் கட்சியின் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.**

**நாடு பொருளாதார ரீதியாக ஸ்திரமான பின்னரே 13ஆவது சரத்தை அமுல்படுத்துவது குறித்து பரிசீலிக்க முடியும் என பொஹொட்டு கட்சியின் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.**

## செஞ்சோலை படுகொலை நினைவேந்தல்;

**கடந்த 2006ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 14ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் வள்ளிபுனம் கிராமத்தில் அமைந்திருந்த செஞ்சோலை சிறுவர் இல்லத்தின் மீது வான்படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் 63 பாடசாலை மாணவிகள் படுகொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது**

**செஞ்சோலை படுகொலையின் 17ம் ஆண்டு நினைவேந்தல் வவுனியாவில் இடம்பெற்றது**

**வவுனியா ஏ9 வீதியில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களினால் 2,367வது நாளாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.**

**அதற்கமைய, காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் செஞ்சோலை படுகொலையின் 17ம் ஆண்டு நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது**

**செஞ்சோலை படுகொலையின் 17ம் ஆண்டு நினைவேந்தல் :முல்லைத்தீவுவில் அஞ்சலி**

**யாழ். பல்கலைக்கழகத்தில் இன்றுசெஞ்சோலை படுகொலையின் 17 ஆவது ஆண்டு நினைவேந்தல் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டது.**

## தமிழர்களின் தலைகளை களனிக்கு கொண்டு....

**சுமந்து கொண்டுதான் களனிக்கு வருவேன்' என முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா நேற்று தெரிவித்திருந்தார்.**

**இதனையடுத்தே, குறித்த விடயம் தொடர்பில் தமிழர் கட்டமைப்பின் அமைப்பாளர் அகத்தியர் அடிகளார் அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளார்.**

**இவ்வறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,**

**இன்று எம் தாயகமான வடக்கு கிழக்கின் அனைத்து பிரதேசங்களிலும் எமது மரபுரிமைகள் மிக வேகமாக ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றன. இதனை எதிர்கொள்ள சரியான பொறிமுறை ஒன்றினை அனைத்து தமிழ் தரப்புக்களும் இணைந்து மேற்கொள்வது அவசியாகும்.**

**அமைப்புசார் நிலையில் இயங்கும் நாம் அனைவரும் எம் அமைப்புக்ளின் தனித்துவங்களை பேணும் அதே நேரம் எம் மக்களின் ஒட்டுமொத்த நலனுக்காக இருப்பை இத்தீவில் நிலைநிறுத்தவதற்காக ஒருங்கிணைந்த கட்டமைப்பாக செயற்பட இந்த தீர்க்கமான தருணத்தில் அழைப்பு விடுகின்றோம்.**

**அதே நேரம் இந்த பிரச்சினையை இதயசுத்தியோடு அணுகி அரசு தீர்க்க தவறின் இந்த தீவில் இனங்களிற்கிடையே சமாதான சகவாழ்வு தொடர்ந்து கேள்விகுறியாகி நாட்டின் எதிர்காலம் அதலபாதாளத்திற்கு செல்லும் என்பதை சுட்டிகாட்டுகின்றோம்.**

**தமிழர்களின் தலைகளை களனிக்கு கொண்டு வருவேன் என பகிரங்கமாக கூறும் அரசியலாளர்களை கைது செய்து நடவடிக்கை எடுப்பதும் தமிழரின் வழிபாட்டுத் தலங்கள் தொடர்பாக மிக மோசமான கருத்துக்களை வெளியிடுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க அரசு உடனடியாக முன்வர வேண்டும்.**

**இவற்றை செய்ய தவறின் தமிழர் நாம் தொடர் சாத்வீக போராட்டங்களிற்கும் ஒத்துழையாமை இயக்க முன்னெடுப்புகளிற்கும் தள்ளப்படுவோம் என இந்த சந்தரப்பத்தில் அரசிற்கு ஆழமாக வலியுறுத்துகின்றோம்.**

**இவ்வியடத்தில் பல்கலைக்கழக சமூகத்தினது பங்களிப்பு புலமைசார் தளத்தில் அத்தியாவசியமானது.**

**தமிழ் தேசிய செயற்பாட்டாளர்கள் பல்கலை உள்ளிட்ட உயர் கல்வி மாணவர்கள் மேலும் வீச்சாக போராட்டங்களை மக்கள் சார்ந்தாக ஒழுங்கமைக்க வேண்டும்.**

**அரசியலாளர்கள் தொடர் அழுத்தத்தை அரசுக்கு வழங்குவதுடன் பாராளுமன்றை புறக்கணித்தல் உட்பட ஒத்துழையாமை இயக்கத்திற்கு தயாராக வேண்டும்.**

**பன்னாட்டு மற்றும் இந்திய அரசின் கவனத்தை மேலும் ஈர்த்து இந்த பாரிய பௌத்த மேலாண்மையை திணிக்கும் பூர்வீக தமிழர்களின் சிவ வழிபாட்டு இடங்களை மாற்றியமைக்கும் செயற்பாடுகளில் அரசுக்கு அழுத்தம் கொடுக்க அனைத்து தரப்பினரும் ஒட்டுமொத்தமாக எம்முள் இருக்கும் அனைத்து வேறுபாடுகளையும் களைந்து முன்வருவோம் என தெரிவித்தார்.**

## தமிழர்களின் வீர வரலாறுகளை மேர்வின் சில்வா....

**செல்வதாக கருத்துக்களை வெளியிட்டிருப்பது வேடிக்கையாக இருப்பதாகவும், முதலில் தமிழர்களின் வீர வரலாறுகள் எத்தகையது என்பதை மேர்வின் சில்வா மற்றும், சரத் வீரசேகர போன்றவர்கள் அறிந்துகொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.**

**செஞ்சோலைப் படுகொலையின் 17ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வில் பங்கேற்றுக் கருத்துத் தெரிவிக்கும்போதே ரவிகரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

**அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,**

**இலங்கை அரசினுடைய கோர முகம்வெளிப்பட்ட நாள் இன்றாகும். அப்பாவிப் பாடசாலை மாணவர்கள் மீது இந்த அரசு படுகொலையைக் கட்டவிழ்த்துவிட்ட நாள் இன்றாகும். குண்டுகளால் பாடசாலை மாணவர்களது வெண்ணிறச் சீருடை குருதியால் நனைந்து சிவப்பாகியதுடன், மாணவர்களது உடல்கள் துண்டுதுண்டாக்கப்பட்டன.**

**இவ்வாறான கொடூரமான ஆட்சியாளர்கள் உள்ள நாட்டில்தான் நாம் வாழ்கின்றோம்.**

**கடந்த 2009 இற்குப் பிற்பாடு நிலப்பறிப்பு, மதத்திணிப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்களின் ஊடாக இன அழிப்புச் செயற்பாடுகளைத் தற்போதும் மேற்கொண்டு வருகின்றார்கள்.**

**இந் நிலையில் தமிழர்களுடைய தலைகளை களனிக்கு கொண்டு செல்லப்போவதாக மேர்வின் சில்வா அண்மையில் கருத்துத் தெரிவித்திருந்தார்.**

**அதேபோல் சரத் வீரசேகர என்பவருடைய சர்ச்சைக்குரிய பல கருத்துக்களையும் நாங்கள் காண்கின்றோம். இவ்வாறான கருத்துக்களை வெளியிடுபவர்கள் தமிழர்களுடைய வீர வரலாறுகள் எத்தகையது என்பதை முதலில் அறிந்துகொள்ளவேண்டும்.**

**அந்த வீரவரலாறுகளின் வரிசையில்வந்த தலைவர் பிரபாகரன், எத்தகைய தலைசிறந்த வீரர்என்பதை இந்த முழு உலகமும் அறியும்.**

**இவ்வாறு எமது வீர வரலாறுகள் இருக்கும் போது எமது தலைகளை களனிக்கு எடுத்து செல்லப்போவதாக கருத்துக்களை வெளிவிடுவது மிகவும் வேடிக்கையானது.**

**இவ்வாறான அரக்க குணமுடையவர்களை வைத்தே இந்த அரசு ஆட்சி நடாத்துகின்றது.**

**இந்த மேர்வின் சில்வா என்பவர் கடந்த 2015ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ச ஆட்சியில் அமைச்சராக இருந்தவராவார்.**

**அதேபோல சரத் வீரசேகர இந்த ஆட்சியில் தேசியப் பட்டியல் மூலம் தெரிவுசெய்யப்பட்டு, முன்பு அமைச்சராகவும் இருந்தவராவார்.**

**அனைத்து பெரும்பான்மையின மக்களையும் நாம் குறைகூறவில்லை. பெரும்பாண்மையினத்தைச் சேர்ந்த பல அறிஞர்கள், புத்திஜீவிகள் இருக்கின்றனர்.**

**இவ்வாறான கொடூர மனம் படைத்தவர்களை பெரும்பாண்மை மக்கள் ஓரங்கட்ட வேண்டும்.**

**தமிழர்கள் நாங்கள், எம்மை நாமே தீர்மானிக்கக்கூடிய தீர்வையே நாம் எதிர்பார்க்கின்றோம்.**

**இவ்வாறு விமானக்குண்டுத் தாக்குதலில் உயிர்நீத்த அப்பாவி மாணவர்களுக்குத் தலைசாய்த்து எனது உளப்பூர்வமான அஞ்சலிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.**

**இந்த அப்பாவி மாணவர்களுடைய பெற்றோர்கள் இங்கு குமுறிக் குமுறி அழுவதை இங்கே காண முடிந்தது. இந்தப் பெறறோருடைய கண்ணீருக்கு இந்த அரசு பதில் சொல்லியே ஆகவேண்டும் என்றார்.**

## இன,மத குரோதத்தை பரப்பும் மேர்வின் மனநலம் பாதிக்கப்பட்டவர்

**ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள விசேட அறிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.**

**அவர் மேலும் தெரிவிக்கையில்,**

**ராஜபக்ச குடும்பத்தினர் திருடர்கள்.அவர்கள் தரகு பணம் பெற்றவர்கள் என மேர்வின் சில்வா குறிப்பிடுவது வேடிக்கையாகவே உள்ளது. ராஜபக்ச குடும்பத்துடனேயே மேர்வின் சில்வா குடும்பம் நடத்தினார். ஒருவேளை அத்தகைய திருட்டு தரகு பணம் பிரச்சினையால்தான்,ராஜபக்சர்களின் குடும்பத்தினரை விட்டு பிரிந்தாரோ என்ற கேள்வி எப்போதும் நாட்டு மக்கள் மனதில் உள்ளது.**

**உலகத்துக்கு அஹிம்சையை போதித்த போதிசத்துவர் பெயரில் இவர் தமிழர்களின் தலையை வெட்டுவாராம். இவரை போன்றவர்களிடமிருந்து பௌத்தை போதிசத்துவர்தான் மீண்டும் பிறந்து வந்து காப்பாற்ற வேண்டும். முன்னைய ராஜபக்ச ஆட்சி காலத்தில், ஊடகவியலாளர்களின் கால்களை உடைப்பேன் என்றும் மேர்வின் சில்வா கூறினார்.பின்னர் ரூபவாஹிணி கூட்டுத்தாபனத்துக்கு சென்று தன் தலையை உடைத்துக்கொண்டு வந்தார்.**

**அதன்பின்னர் தேர்தலில் போட்டியிட்டு சிங்கள மக்களாலேயே அரசியலில் இருந்து விரட்டப்பட்டார்.**

**நாட்டில், விகாரைகளையோ, கோவில்களையோ, பள்ளிகளையோ, தேவாலயங்களையோ கட்டுவிப்பதில், பூஜைகளை செய்வதில் இடைஞ்சல்கள் ஏற்பட்டால், அதை சட்டப்படி அணுக வேண்டும். அந்த சட்டம் அனைவருக்கும் பொதுவாக இருக்க வேண்டும். தமிழர் தலைகளை கொய்து வருவேன் என்ற, தலை வெட்டும் காலம் எல்லாம் இப்போது மலையேறி விட்டது.**

**மேர்வின் சில்வாவை பாரதூரமானவராக எடுக்க தேவையில்லை. ஆனால், இவரது கருத்து, பாரதூரமானது. நாட்டில் இன,மத குரோதத்தை உருவாக்கும் கருத்து.**

**இவருக்கு எதிராக சட்டம் நடவடிக்கை எடுக்கவேண்டும். அரசில் இருக்கும் தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகள் இதுபற்றி தங்கள் தலைவர்களான ராஜபக்ச, ரணில் விக்கிரமசிங்க ஆகியோரிடம் புகார் செய்ய வேண்டும். எனவும் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.**

## சமஷ்டி அடிப்படையில் தான் தமிழருக்குத் தீர்வு ....

இணங்கவும் தமிழ்த் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நடவடிக்கையை விரைந்து முடிக்கவும் ஜனாதிபதியாகிய தங்களைக் கோருகின்றோம்.'- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான இரா.சம்பந்தன் நேற்று (14) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

13 ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பில் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் நிலைப்பாட்டை அறியத் தருமாறு ஜனாதிபதி கோரியிருந்தார். அதற்கான காலக்கெடு நாளை (15) முடிவடைய இருக்கையில் சம்பந்தன் தமது ஐந்து பக்கக் கடிதத்தை நேற்று அனுப்பி வைத்தார்.

அதில் –

சுதந்திரம் பெற்ற காலம் முதல் – குறிப்பாக 1956 முதல் – தமிழர்கள் சமஷ்டி அடிப்படையான தீர்வே தங்கள் அபிலாஷை என்பதை எல்லாத் தேர்தல்களிலும் மாறாமல் வலியுறுத்தி வந்திருக்கின்றார்கள் என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இடையில் அவர்கள் தனிநாட்டு கோரிக்கையையும் கூட வலியுறுத்தினர் என்பது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

அர்த்தமுள்ள எந்தத் தீர்வும் சமஷ்டி அடிப்படையில் அமைய வேண்டும் என்பது இந்தக் கடிதத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

தமிழரின் தேசிய இனப் பிரச்சினை மற்றும் அவர்களின் நியாயமான அபிலாஷைகள் தொடர்பில் கடந்து வந்த ஒவ்வொரு அரசுகளும் அளித்த வாக்குறுதிகள் மற்றும் முயற்சிகள் இந்தக் கடிதத்தில் விவரிக்கப்பட்டுள்ளன.

1983 முதல் இந்த விடயத்தில் இந்தியா வழங்கி வரும் பங்களிப்பும் இதில் விவரிக்கப்பட்டுள்ளது.

இவற்றின் அடிப்படையில், தமிழ் மக்களின் அபிலாஷைகளின் உட்கிடைகளைப் புரிந்து கொண்டு, அவற்றுக்கு இணங்கவும், பல்வேறு அரசுகள் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பில் காலத்துக்கு காலம் வழங்கி வந்த உறுதிமொழிகளைக் கவனத்தில் எடுத்தும் தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நடவடிக்கையை விரைந்து முடிக்குமாறு சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார்.

# வீரமுனை படுகொலை 33 வது நினைவேந்தலானது உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு







(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டம் வீரமுனை கிராமத்தில் 1990.08.12 அன்று 232 இற்கும் அதிகமான தமிழ் மக்கள் கொன்று குவிக்கப்பட்டு 33 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது. இந்த படுகொலையினை நினைவு கூர்ந்து வீரமுனையில் ஆலய பூசையுடன் சனிக்கிழமை(12) அங்கு அமைந்துள்ள நினைவுத்தூபிக்கு முன்னால் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதன்போது பிள்ளையார் ஆலயத்திற்கு முன்னால் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபிக்கு மாலை அணிவிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டவர்களை நினைவு கூர்ந்து சுடர் ஏற்றி ஒரு நிமிட அஞ்சலியுடன் அகவணக்கமும் செலுத்தப்பட்டுள்ளது.

கடந்த யுத்த சூழ்நிலையில் சம்மாந்துறை பிரதேசத்தில் நிகழ்ந்த வன்செயல்கள் காரணமாக வீரமுனையையும் அதன் சுற்றுவட்டக் கிராமங்களான வீரச்சோலை, மல்லிகைத்தீவு, மல்வத்தை, வளத்தாப்பிட்டி, சொறிக்கல்முனை அம்பாறை பகுதிகளைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான மக்கள் தங்கள் வீரமுனை சிந்தா யாத்திரைப் பிள்ளையார் கோயில் வளவினுள்ளும் வீரமுனை இராமகிருஸ்ண மிசன் பாடசாலை வளவினுள்ளும் தஞ்சம் புகுந்திருந்தனர். இந்த நிலையில் 1990 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி மர்மக் குழுவினரால் 400க்கும் அதிகமான பொதுமக்கள் சுட்டும் வெட்டியும் கொலை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆலயத்தினுள் குரூரமாக இடம்பெற்ற வீரமுனைப் படுகொலைக்கு நீதியும் நிவாரணமும் கிடைக்க வேண்டும்!

## 33 வது படுகொலை நினைவேந்தலில் ஜெயசிறில் கோரிக்கை

( வி.ரி. சகாதேவராஜா)

கடந்த 33 வருடங்களுக்கு முன்பு ஏதுமறியாத நூற்றுக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் ஆலயத்தினுள் வைத்து வெட்டியும் கொத்தியும் கொடூரமாக குரூரமாக கொலை செய்யப்பட்டார்கள். இதுவரை அப்படுகொலைக்கு நீதியான விசாரணையோ எந்த நிவாரணமோ கிடைக்கவில்லை.

இவ்வாறு வீரமுனைப் படுகொலையின் 33ஆவது வருட நினைவேந்தல் நிகழ்வு (12) சனிக்கிழமை இடம் பெற்ற போது கலந்து கொண்ட இலங்கை தமிழரசுக் கட்சியின் காரைதீவு பிரதேச தலைவரும் முன்னாள் தவிசாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் கோரிக்கை விடுத்தார்.

வீரமுனை படுகொலையின் 33வது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினம்வீரமுனை ஆலயநிருவாகத்தின் ஏற்பாட்டில் வீரமுனை படுகொலை நினைவுத் தூபி முன்றலில் அஞ்சலி இடம் பெற்று பின்னர் ஆலய வளாகத்தில் பொது நினைவேந்தல் நடைபெற்றது.




அங்கு முன்னாள் தவிசாளர் கிருஷ்ண பிள்ளை ஜெயசிறில் மேலும் பேசுகையில்..

சம்மாந்துறை வீரமுனையையும் அதன் சுற்றுவட்டக் கிராமங்களான வீரச்சோலை, மல்லிகைத்தீவு, மல்வத்தை, வளத்தாப்பிட்டி, சொறிக்கல்முனை, அம்பாறை பகுதிகளைச்சேர்ந்த பல நூற்றுக்கணக்கான மக்கள் தங்கள் குழந்தை குட்டிகளுடன் வீரமுனை சிந்தா யாத்திரைப் பிள்ளையார் கோயில் வளவினுள்ளும் வீரமுனை இராமகிருஷ்ண மிசன் பாடசாலை வளவினுள்ளும் 1990 ஜுன் மாதம் முதல் யூலை மாதம் வரை தஞ்சம் புகுந்திருந்தனர்.

இக்காலகட்டத்தில், ஆகஸ்ட் 12ம் நாளன்று ஆலயத்தினுள் புகுந்த முஸ்லிம் ஊர்காவல் படைக் கும்பல் ஒன்று 400க்கும் அதிகமான பொதுமக்களை சுட்டும் வெட்டியும் கொன்றனர். இவர்களில் பெண்கள், குழந்தைகள் உட்பட பல அப்பாவிப்பொது மக்கள் அடங்குவர்!

இன்று 33, ஆண்டுகள் கடந்தும் கொலையாளிகள் எவரும் தண்டிக்கப்படவில்லை.

நீதியும் நியாயமும் கிடைக்கவில்லை. அது கிடைக்க வேண்டும் என்றார்.

# மட்டு கரடியனாற்றில் யானை தாக்கி மீனவர் பலி



(கனகராசா சரவணன்)

கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள மரப்பாலம் புத்தம்புரி குளத்தில் மீன்பிடிக்க சென்ற மீனவர் ஒருவர் யானை தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்டகப்பட்ட சம்பவம் ஞாயிறு;றுக்கிழமை (13) காலையில் இடம்பெற்றுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

மயிலவெட்டுவானை சேர்ந்த 42 வயதுடைய இராசமன்னன் தேவராசா என்பவரேஇவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

குறித்த நபர் சனிக்கிழமை இரவு களத்தில் மீன்படிக்க சென்றசர் காலையில் வீடுதிரும்பாத நிலையில் அவரை உறவினர்கள் தேடி சென்ற நிலையில் குளத்துக்கு அருகாமையில் யானை தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்த நிலையில் சடமாக கிடப்பதை கண்டு பொலிசாருக்கு தெரிவித்தனர்.

இதனையடுத்து சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக வைத்தியநாலையில் ஒப்படைப்பதற்கு நீதிமன்ற அனுமதியை பெறுவதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டு வருவதாக பொலிசார் தெரிவித்தனர்.

# 10 லட்சருபா பெறுமதியான திறன் பலகைகளை அன்பளிப்பு செய்த பரோபகாரி எந்திரி ராஜன்




( வி.ரி. சகாதேவராஜா)

மட்டக்களப்பு மேற்கு வலயத்துக்கு உட்பட்ட பின்தங்கிய பல பாடசாலைகளுக்கு 10லட்சரூபா பெறுமதியான திறன் பலகைகளை கனடாவில் வாழும் முனைக்காட்டை சேர்ந்த பொறியியலாளர் கோபாலபிள்ளைதுரைராஜசிங்கம் ( ராஜன்) அவர்களினால் அன்பளிப்பு செய்யப்பட்டது.

முனைக்காடு கிராமத்திலுள்ள பாடசாலைகளுக்கு 10 இலட்சம் பெறுமதியான திறன் பலகை ( smart board) நன்கொடையாக வழங்கப்பட்டது.

முனைக்காடு கிராமத்திலே இருக்கின்ற முனைக்காடு விவேகானந்த மகா வித்தியாலயத்திற்கும் முனைக்காடு சாரதா வித்தியாலயத்திற்கும் 10 இலட்சம் ரூபா பெறுமதியான திறன் பலகை ( smart board ) கள் அண்மையில் வழங்கப்பட்டிருந்த நிலையில் பொறியியலாளர் ராஜன் அண்மையில் பாடசாலைக்கு விஜயம் செய்திருந்த போது அவற்றை உத்தியோக பூர்வமாக கையளித்திருந்தார்.

பொறியியலாளர் ராஜன் கல்லடி சிவானந்தா வித்தியாலயத்தில் பயின்று வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் பத்தன நுவரெலியா போன்ற பகுதிகளில் பிரதம பொறியியலாளராக பணியாற்றியிருந்தார்.

அத்துடன் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் கற்றல் செயற்பாட்டிற்கு பங்களிப்பு செய்யும் விதத்தில் பயன்படுத்தப்படுகின்ற இவ் திறன் பலகை ( smart board) களை கையாள்வது தொடர்பிலான கருத்தரங்கும் ராஜன் தலைமையில் இடம்பெற்றிருந்தது.

முனைக்காடு கிராம பாடசாலைகளின் வளர்ச்சியில் அர்பணிப்புடன் செயற்படும் பொறியியலாளர் ராஜன் பணி சிறக்க பலரும் வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

# மில்லியன் ரூபா தள்ளுபடி! மக்கள் மீது வரிச் சுமைகள்!



மில்லியன் ரூபா தள்ளுபடி! மக்கள் மீது வரிச் சுமைகள்! : சென்ற கிழமை நடந்த COOP குழுவில் சாணக்கியன்!; மேலும் கருத்து தெரிவித்த அவர்.

மகிந்த ராஜபக்ச பிரதமராக இருந்த காலத்தில், மாகா உட்பட 15 நிறுவனங்கள், அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய 793 மில்லியன் ரூபாவை தள்ளுபடி செய்வதற்கு அமைச்சரவையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மற்றும் அதில் மாகா நிறுவனம் செலுத்த வேண்டிய 482 மில்லியனை குறைக்க அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளதாக கோப் குழுவில் நடந்த கூட்டத்தின் போது இதன் விடயம் வெளிப்படுத்தப்பட்டது அதன் போது நானும் அக் கூட்டத்தில் இருந்தேன்.

நாடானது பாரிய கடன் சுமைகளுக்கு மத்தியில் இருக்கின்றது அத்துடன் மக்கள் போதிய வருமானம் இன்றி வரிச் சுமையுடன் அன்றாட செலவுகளுக்கே அல்லல்படும் இதே வேளை இவ்வாறான பண விலக்களிப்புக்கள் ஆனது மேலும் மேலும் மக்களையே கடன் சுமைக்குள் தள்ளும் நடவடிக்கையாக உள்ளது அக் கூட்டத்தில் இதற்கான எதிர்ப்பினை வெளிக் கொனர்ந்திருந்தேன்.

இவ்வாறான பண விலக்களிப்புக்கள் நமது நாட்டுக்கு உள்ளூர் உற்பத்திகளை மேற்கொள்ளும் மேலும் அவற்றை இவ் இக்கட்டான காலகட்டத்திலும் நஷ்டமாக இருப்பினும் கைவிடாது தொடர்ந்து நடாத்திவருபவர்களுக்கு வழங்கப்படினும் கூட எமது நாட்டின் உள்ளூர் உற்பத்திகள் எதிர்காலத்தில் பாதிக்கப்படாது மற்றும் நிறுத்தப்படாது தடுக்கலாம். என்று குறிப்பிட்டார்.

# நந்தவன சித்தி விநாயகரின் ஆடி அமாவாசை உற்சவ திருவிழா!





(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு ஸ்ரீ நந்தவன சித்தி விநாயகர் தேவஸ்தானத்தின் வருடாந்த ஆடி அமாவாசை மகோற்சவம் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

ஆலய பரிபாலன சபை தலைவர் ஆசிரியர் கே. ஜெயமோகன் ஒழுங்கமைப்பில் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ பொன்.நாகநாதன் குருக்கள் தலைமையில் தினமும் பகல் இரவு பூஜைகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

சொற்பொழிவுகளும் அன்னதானமும் இடம்பெற்று வருகின்றன. கடந்த 30 ஆம் தேதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான இவ் உற்சவம் நாளை மறுதினம் 16ஆம் தேதி புதன்கிழமை தீர்த்தோற்சவம் இடம் பெற இருக்கின்றது.

# வாகரையில் காணாமல் போன 13 வயது 4 சிறுமிகள் வாழைச்சேனை சுங்காங்கேணியில் மீட்பு

## 17 வயதுடைய சிறுவன் இருவர் கைது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு வாகரையில் பாடசாலை ஒன்றில் இல்லவிளையாட்டு போட்டிக்கு என வீட்டைவிட்டு வியாழக்கிழமை (10) சென்று காணாமல் போன நான்னு 13 வயதுடைய சிறுமிகளை வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள சுங்காங்கேணி பிரதேசத்திலுள் வீடு ஒன்றில் வெள்ளிக்கிழமை (11) மீட்டதுடன் 17 வயதுடைய சிறுவன்களை கைது செய்துள்ளதாக வாகரை பொலிசார் தெரிவித்தனர்.

வாகரை பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசத்தைச் சேர்ந்த 13 வயதுடைய 4 சிறுமிகள் கடந்த வியாழக்கிழமை அந்த பிரதேசத்திலுள்ள பாடசாலை ஒன்றில் இடம்பெறும் இல்ல விளையாட்டுப் போட்டிக்கு செல்வதாக வீட்டை விட்டு வெளியேறி சென்று இரவாகியும் வீடு திரும்பாததையடுத்து பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

இதனையடுத்து பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி சப் இன்பெஸ்டர் கிருபாகரன் தலைமையிலான பொலிசார் மேற்கொண்டுவந்த நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை (11) வாழைச்சேனை சுங்காங்கேணி பகுதியில் உள்ள வீடு ஒன்றில் 4 சிறுமிகளை மீட்டதுடன் 17வயதுடைய இரு சிறுவன்களை கைது செய்தனா.;

குறித்த சிறுமிகள் வாகரை பொலிஸ் பிரிவிலுள்ள பாடசாலை ஒன்றில் 8ம் தரத்தில் கல்வி கற்றுவரும் நிலையில் 4 நண்பிகளும் சம்பவதினமான வியாழக்கிழமை அந்த பிரதேசத்திலுள்ள பாடசாலை ஒன்றில் இடம்பெறும் இல்ல விளையாட்டுப் போட்டிக்கு செல்வதாக பெற்றோரிடம் தலா ஒவ்வொருவரும் 300 ரூபா பணத்தை பெற்றுக் கொண்டு அன்றைய தினம் வீட்டில்; இருந்து வெளியேறியுள்ளனர்.

இதனையடுத்து பாடசாலை சீருடையுடன் வீட்டில் இருந்து வெளியேறிய சிறுமிகள் அதனை கழற்ற வேறு ஆடைகளை அணிந்து கொண்டு அங்கிருந்து பஸ்வண்டியில் ஏறி பாசிக்குடா சென்று கடலில் நீராடிய நிலையில் அங்கு நீராடிய சுங்காங்கேணியைச் சேர்ந்த 17, 16 வயது சிறுவன்களுடன் இரு சிறுமிகளுக்கும் இடையே காதல் ஏற்பட்டது.

இதனையடுத்து இரவாகியதால் சிறுமிகள் வீடு செல்ல பஸ்வண்டி இல்லாத காரணத்தால் எங்கள் வீட்டிற்கு வந்து தங்கிவிட்டு காலையில் போகுமாறு காதலன்கள் சிறுமிகளை கோரியதையடுத்து 4 சிறுமிகளும் காதலன் ஒருவரின் வீட்டிற்கு சென்று தங்கியுள்ளதாக பொலிசாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

# கிழக்கு மாகாணத்தின் ஜனநாயக பங்குதாரர்களுக்கான ஓர் இடம்






(க.ருத்திரன்)

'கிழக்கு மாகாணத்தின் ஜனநாயக பங்குதாரர்களுக்கான ஓர் இடம்' என்ற தொனிப் பொருளில் ஏ.எச்.ஆர்.சி.எனும் அரச சார்பற்ற நிறுவனத்தினால் பிரதேசத்தின் அபிவிருத்திக்காக கலந்துரையாடல் நிகழ்வொன்று கோறளைப்பற்று பிரதேச சபை மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பிரதேசத்தின் அபிவிருத்திக்காக உள்ளூர் ஊடகவியலாளர்கள், சிவில் சமூக அமைப்புக்கள், உள்ளூராட்சி சபை பிரதிநிதிகளுக்கிடையிலான உறவை வலுப்படுதுவதன் மூலம் உண்மைத் தன்மை மற்றும் வெளிப்பாட்டு தன்மையை அதிகரித்தல் என்கின்ற அடிப்படையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது பிரதேச சபையினால் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தி பணிகள் மக்கள் சேவை தொடர்பான பணிகள் என்பன தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

அனைத்து சந்திப்புக்களிலும் பங்குபற்றி உள்ளூராட்சி சபைகளின் செயற்பாடுகள் மற்றும் வெளிப்பாடுகள் சம்பந்தமாக சமூகத்திற்கு தெரிவித்தல்.சந்திப்புக்களில் கலநதுரையாடப்பட வேண்டிய சமூக பிரச்சினைகளையும்,தேவைகளையும் அடையாளப்படுத்துதல். உள்ளூராட்சி சபைகளினால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் குறித்து சமூகத்திற்கு அறியப்படுத்தல் என்கின்ற தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டது.இன்றைய நிகழ்வானது சபையினால் முன்னெடுக்கப்படுகின்ற நவீன மற்றும் புத்தாக்க செயற்பாடுகளை மக்களுக்கு வெளிப்படுத்துவதற்கான களமமாக அமைந்தது.

இந் நிகழ்வில் பிரதேசத்தில் உள்ள சன சமூக நிலைய உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள்,பிரதேச சபையின் உயர் அதிகாரிகள்,ஏ.எச்.ஆர்.சி.நிறுவனத்தின் செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்டனர்.

# நாளை சித்திரவேலாயுதனின் ஆடி அமாவாசை உற்சவ தீர்த்தோற்சவம்





( வி.ரி. சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற திருக்கோவில் சித்திரவேலாயுதசுவாமி ஆலய வருடாந்த ஆடி அமாவாசை மகோற்சவம் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

நாளை புதன்கிழமை தீர்த்தோற்சவம் இடம் பெறும்.

ஆலய பரிபாலன சபை தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷ் ஒழுங்கமைப்பில் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வர குருக்கள் குருக்கள் மற்றும் பிரதம குரு சிவஸ்ரீ திருக்குமரக் குருக்கள் தலைமையில் ஆலயகுரு சிவஸ்ரீ அங்குசநாதக்குருக்களின் ஒத்துழைப்புடன் தினமும் பகல் இரவு பூஜைகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

பக்தர்கள் வடம் பிடித்து தேரோட்டத்துடன் சொற்பொழிவுகளும் அன்னதானமும் இடம்பெற்று வருகின்றன.

கடந்த 30 ஆம் தேதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான இவ் உற்சவம் நாளை 16ஆம் தேதி புதன்கிழமை தீர்த்தோற்சவம் இடம் பெற இருக்கின்றது.

இது தொடர்பாக செய்தியாளர் மாநாடு ஒன்று நேற்று இடம்பெற்றது.

# திருமலையில் ஊடகவியலாளர் குருநாதன் நினைவலைகள் நிகழ்வு





(ஹஸ்பர்)

திருகோணமலையின் ஊடகத்துறை வரலாற்றில் தனக்கென ஓர் வழித்தடத்தை உருவாக்கிய அமரர் சின்னையா குருநாதனின் அகவைதினமான (11.08.2023) அன்பின் பாதையின் எண்ணம்போல் வாழ்க்கை கலை இலக்கிய மன்றத்தின் ஏறபாட்டில் நடைபெற்ற பகிர்வும் ஒன்றுகூடலும் நிகழ்வு திருகோணமலை நகரசபை பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் 'நானும் குருநாதனும்' எனும் நினைவேடும் வெளியிடப்பட்டது.

இவ் நிகழ்வு கலை இலக்கிய மன்றத்தின் தலைவர் கனக. தீபகாந்தன் தலைமையில் இடம் பெற்றது.

# தனமல்விலவில் 4 கஞ்சா தோட்டம் எஸ்.ரி.எப். முற்றுகை 3 பேர் கைது 20674 கஞ்சா செடிகள் பிடுங்கியழிப்பு

(கனகராசா சரவணன்)

தனமல்வில ஹம்பேகமுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தனியார் காணியில் சட்ட விரோதமான முறையில் 4 காணிகளில் பயிரிடப்பட்டிருந்த கஞ்சா தோட்டத்தை உடவலவ விசேட அதிரடிப்படையினர் ஞாயிற்றுக்கிழமை (13) காலையில் முற்றுகையிட்டு 5 அடி உயரம் கொண்ட 20 ஆயிரத்து 674 கஞ்சா செடிகளை பிடஞ்கி அழித்துள்ளதுடன் ளுடன் 3 பேரை கைது செய்ததுடன் கஞ்சா செடிகளை பிடுங்கி அழித்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

உடவலவ் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து ஹம்பேகமுவ பொலிஸ் பிரிவிலுள்ள 4 கஞ்சா தோட்டங்களை சம்பவதினமான ஞாயிற்றுக்கிழமை (13) காலையில் விசேட அதிரடிப்படையின் முற்றுகையிட்டனர்.

இதன்போது கஞ்சா செய்கையில் ஈடுபட்ட 3 பேரை கைது செய்ததுடன் அங்கு 20 பேசர்ச் காணியில் 05-'06' உயரம் கொண்ட 4358 கஞ்சா செடிகளும், 10 பேர்ச் காணியில் 05-'09' உயரம் கொண்ட 2178 கஞ்சா செடிகளும்;, 30 பேர்ச் காணியில் 05' உயரம் கொண்ட 6751 கஞ்சா செடிகளும், 30 பேர்ச் காணியில் 04' 04' உயரம் கொண்ட 7387 கஞ்சா செடிகளுமாக 20 ஆயிரத்து 674 கஞ்சா செடிகளை பிடிஞ்கி அழித்தனர்.

இதில் கைது செய்யப்பட்டவர்களையும் சான்று பொருளாக கஞ்சா செடிகளையும் தம்மிடம் விசேட அதிரடிப் படையினர் ஒப்படைத்துள்ளதாகவும் இவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக ஹம்பேகமுவ பொலிஸ் தெரிவித்தனர்.

## எழுதத் தூண்டும் எண்ணங்கள் : 11

# திரும்பிப் பார்...

*மகிழ்ச்சியான வாழ்க்கை வாழத் தவறி*
*மகிழ்ச்சியை இழந்து தவிக்கும் - நீ*
*இழந்த வாழ்வுதனை ஒருகணம் திரும்பிப்பார்..*



**சோலையூர்க் குருபரன்**


மனித வாழ்க்கையில் எத்தனையோ சம்பவங்கள் நடக்கின்றன. அவற்றுள் சில நமக்குச் சந்தோசத்தையும் மகிழ்ச்சியையும் கொடுத்திருக்கும். இன்னும் சில தோல்வியைக் கொடுத்திருக்கும். அவற்றுள் சில நீங்காத மனவடுவைப் பெற்றுத் தந்திருக்கும். பல செயற்பாடுகள் அதன் முக்கியத்துவம் உணராது ஏனோ தானோ என விளையாட்டாகச் செய்து முடித்திருப்போம். பல வேளைகளில் நாம் செய்யும் கருமங்களை அர்ப்பணிப்பு, ஈடுபாட்டுடன் மனநிறைவோடு செய்து முடித்திருப்போம். சில கருமங்களைச் செய்வதற்காகக் காலத்தைக் கடத்தி இருப்போம். சில சந்தர்ப்பங்களில் கடமையைச் சரியாகச் செய்யாததனால் பலரிடம் திட்டு வாங்கியிருப்போம். இன்னும் சில சந்தர்ப்பங்களில் ஏன்தான் இந்த வேலையைப் பொறுப்பெடுத்தோம் என எண்ணத் தோன்றி இருக்கும். ஏன், எதற்காக இவ்வாறு நடந்தது எனச் சிந்தித்தும் இருப்போம். அவ்வாறு பல சந்தர்ப்பங்களில் நமது பெறுமதியான நேரத்தை வீணடித்திருப்போம். நேரம் பொன்னானது என்பதை மறந்திருப்போம். நாம் வீணடித்த நேரம் திரும்பி வராது என்பதையும் உணராது இருந்திருப்போம். நேரம் பொன்னாது என்பதை உணரும் போதுதான் நமக்குப் பல உண்மைகள் தெரியவரும்.

இந்த வாழ்க்கை பல பாடங்களைக் கற்றுத் தருகிறது. அதனை முதலீடாகக் கொண்டு இலட்சியத்தை அடைய முயலும் போது நிறுவனத்தின் இலக்கையும் அடைந்திருப்போம். ஒருவரிடம் தனியாள் அபிவிருத்தி, நிறுவன அபிவிருத்தி, சமூக அவிருத்தி, நாட்டு அபிவிருத்தி இலக்குகள் இருக்க வேண்டும். எந்தச் சந்தர்ப்பத்திலும் இலக்குகளை அடைய முயற்சிக்க வேண்டும். அந்த இலக்குகள் நம் மனதில் கொழுந்துவிட்டு எரிய வேண்டும். நமது எண்ணம், சொல், செயலில் அபிவிருத்தி பற்றிய நோக்கமே இருக்க வேண்டும். எதிர்காலம் பிரகாசமாக இருக்க ஒவ்வொரு செயலிலும் அர்ப்பணிப்பு, ஈடுபாடு, பயிற்சி, முயற்சி, நம்பிக்கை ஆகியன வெளிப்படுத்தப்பட வேண்டும். எங்கும் எப்போதும் எதிலும் நம் கனவு மெய்ப்பட வேண்டும். இலட்சியமில்லாத வாழ்க்கை நீர்மேல் எழுத்துப் போன்றது. நம்மை நாம் அறிந்து சோதனைகள், சவால்களை எதிர்த்துப் போராட வேண்டும். வாழ்க்கையில் நாம் பெறும் அனுபவங்கள் எமக்கு நல்ல படிப்பினையைப் பெற்றுத் தந்திருக்கும்.

இந்த வாழ்க்கை நமக்குக் கிடைத்த மிகப் பெரிய வரம், கிடைத்த வாழ்க்கையை மெச்சும்படி பெறுமதியானதாக வாழ்ந்து காட்ட வேண்டும். பலர் தமது வாழ்க்கையை வாழ்வதை விடுத்துப் பிறருக்காக வாழ்ந்து, தமது பெறுமதியான வாழ்க்கையை இழந்து வருந்துவதில் எந்தப் பயனுமில்லை. நமக்கென விதிக்கப்பட்ட வாழ்க்கையை முறையாகத் திட்டமிட்டு வாழ்வாங்கு வாழ வேண்டும். அப்படி வாழ வேண்டும் இப்படி இருக்க வேண்டும் என்றெல்லாம் கனவு காணக்கூடாது. இருப்பதைக் கொண்டு சந்தோசமாக, மகிழ்ச்சியாக வாழப் பழகிக் கொள்ள வேண்டும். அவனைப் பார், இவனைப் பார், அவன் எப்படி வாழ்கிறான், இவன் எப்படி வாழ்கிறான் என்றெல்லாம் பலரும் கூறுவார்கள். அதையெல்லாம் கருத்தில் கொண்டால் நாம் நிம்மதியாக வாழ முடியாது. கஷ்டம், நஷ்டம், துன்பம், துயரம், வேதனை, சோதனை இவை எல்லாம் மனிதர்கள் யாவருக்கும் பொதுவானது. இராமர், கிருஷ்ணர், முஹமது நபி, இயேசுநாதர் ஆகியோர் மனிதனாகப் பிறந்து பட்ட துன்பங்களை யோசித்துப் பாருங்கள. இந்த உலகம் அவை எல்லாவற்றையும் எதிர்கொண்டு முயற்சி, நம்பிக்கையோடு வீறுகொண்டெழுந்து தொடர்ந்து செல்பவர்களைத்தான் சந்தோசமாக வாழ வைக்கும். அவர்கள்தான் வெற்றியாளர்களாகவும் இருப்பார்கள்.

ஒரு குடும்பத்தில் ஆசைக்கு ஒன்று ஆஸ்த்திக்கு ஒன்று என அழகான இரு பிள்ளைகள். இருவரும் படிக்கிறார்கள். ஓரளவு சொத்துச் சுகமும் இருக்கின்றன. கணவனும் மனைவியும் பல வேளைகளில் கீரியும் பாம்பும் போலவே இருப்பார்கள். பிரச்சினை ஆரம்பித்தால் சில வேளைகளில் அடிதடியுடன் முடியும். இருவரும் தலையைப் பிடித்துப் இழுப்பதும், ஆள் மாறி மாறி அடிப்பதும் மிக மோசமான வசைச் சொற்களால் திட்டுவதும். பழி போடுவதுமாகச் சம்பவம் நடந்து முடியும். ஓரிரு நாட்களின் பின்னர் இருவரும் உறவாகி மெச்சத்தக்க அன்போடு இருப்பார்கள். யாராவது ஏதும் கூறிவிட்டால் போதும் கலவரம் ஆரம்பித்துவிடும். இருவரும் சுமாரான தோற்றமுடையவர்கள். அரச தொழிலிலும் இருக்கிறார்கள். இருந்தும் என்ன செய்வது. சொந்த புத்திக்கு வாழவில்லையே. கேப்பா புத்தியும் சந்தேகமும் சேர்ந்து நிம்மதியை இல்லாமலாக்கிவிட்டது. ஆற அமர இருந்து இருவரும் பிள்ளைகள் இருவரினதும் எதிர்கால நன்மை கருதி சந்தேகம், வீண் பிரச்சினைகளை விடுத்து, விட்டுக் கொடுத்துப் புரிந்துணர்வோடு பேசித் தீர்த்துச் சந்தோசமாக வாழ்ந்திருக்கலாம். எது நடக்கக் கூடாது என இருவரினதும் பெற்றோர் விரும்பினார்களோ அதுவும் நடந்துவிட்டது. தற்போது இருவரும் பிரிந்திருக்கிறார்கள். பிள்ளைகள் இருவரும் என்ன பாவம் செய்தார்கள். சந்தேகமும் பிடிவாதமும், புரிந்துணர்வும் விட்டுக் கொடுப்பின்மையும் எங்கு கொண்டு போய் நிறுத்தி இருக்கிறது. சீர்தூக்கிப் பார்த்தால் உப்புச் சப்பில்லாத பிரச்சினைகளைப் பெரிதாக்கிப் பிடிவாதம் காரணமாக் பிரிந்திருக்கிறார்கள் என்பது தெரியவரும். அவர்கள் இருவரும் வாழ்க்கையில் எவ்வளவு சந்தோசத்தை இழந்திருக்கிறார்கள் என்பதை நினைத்துப் பார்க்கவில்லை.

சிலர் வாழ்க்கையைக் கருத்துள்ளதாக மாற்றிச் சந்தோசமாக வாழ்வது பற்றிச் சிந்திப்பதில்லை. சிறந்த தீர்மானம் திட்டமிடலின்றி மனம் போன போக்கில் வாழ்ந்து சந்தோசத்தை இழந்து நிற்பார்கள். எதிர்காலம், நிம்மதியான வாழ்க்கை பற்றிச் சிந்திக்காமல் ஊதாரித்தனம் செய்து சொத்துச் சுகங்கள் யாவற்றையும் இழந்து நிற்பார்கள். அன்பினால் சாதிப்பதை விடுத்து பணம், அதிகாரம், செல்வாக்கு என்பவற்றைக் கொண்டு குறுக்கு வழியில் சாதிக்க நினைப்பார்கள். இன்னும் சிலர் ஆலோசனை, அறிவுரைகளைச் செவிமடுக்காது, மனைவி உறவிர்களின் கருத்தைக் கேட்காது சொத்துச் சுகங்களை இழந்து நிற்பார்கள்.



ஒருவர் வெளிநாடு செல்லும் ஆசையில் மனைவி, உறவினர்கள், சுற்றத்தார், நண்பர்களின் அறிவுரையைச் செவி மடுக்காமல் மனைவி, பிள்ளைகளின் நகைகளை அடகு வைத்தும், வங்கியில் இருந்த சேமிப்பெல்லாம் எடுத்தும் போதாமல் காணியை விற்றும், உறவினர்களிடம் கடன் வாங்கியும், வட்டிக்குக் கடன் எடுத்தும் கனடா செல்வதற்காகப் பணம் கொடுத்து, முகவர் ஆசை காட்டி மோசம் செய்து துபாயில் இறக்கிச் சென்று விட்டான். முகவர்களால் வெளி நாடுகளுக்கு அனுப்புகிறேன் என அழைத்துச் செல்லப்பட்டுப் பலர் ஏமாற்றப்பட்டிருப்பது தெரிந்திருந்தும் சிந்தித்துச் செயற்படாமையால் ஏமாந்து திரும்பி வந்திருக்கிறார். இவரின் அவசர முடிவு, பிடிவாதம் என்பவற்றால் நகை நட்டுக்கள், சொத்துச் சுகம், வீடு, வாசல் எல்லாம் இழந்து தெருவுக்கு வந்திருக்கிறார். இவரைப்போல் இன்னொருவர் ஏமாற்றமும் கடன் சுமையும் தாங்க முடியாமல் தற்கொலை செய்து கொண்டார். இவர்கள் இருவரும் சிந்தித்துச் செயற்பட்டிருந்தால் இழப்புக்களைத் தவிர்த்திருக்கலாம்.

வாழும்போது இலட்சியம், இலக்கின்றி வாழ்ந்து வாழ்வின் பெரும் பகுதியைக் கடந்த பின்னர் இழந்த வாழ்க்கையைப் பற்றிச் சிந்தித்து எந்தப் பிரயோசனமும் கிடைக்கப் போவதில்லை. காலம் கடந்த பின்னர் வரும் சுடலை ஞானத்தினால் ஆகப் போவது ஒன்றுமில்லை. தாம் பெற்ற அனுபவத்தையும் படிப்பினையையும் ஆதாரமாகக் கொண்டு இருக்கின்ற மிகுதிக் காலத்தைச் சிறப்பாகத் திட்டமிட்டு இலட்சியம், விடாமுயற்சி நம்பிக்யோடு செயற்பட்டால் வாழ்வு ஒளிமயமானதாக மாறும், எங்கும் எதிலும் சாதிக்கலாம். வெற்றியும் பெறலாம். நம்பிக்கையோடு வாழ்ந்தால் சிகரமும் தொடலாம். வெற்றி என்ற இலக்கை நோக்கி விடாமுயற்சி, தனனம்பிக்யோடு செயற்பட்டால் நீங்கள் எதிர்பார்த்தவை யாவும் உங்கள் காலடிக்கு வந்து சேரும். சவால்கள், தடைகள், அச்சுறுத்தல்களை வென்று துணிவுடன் செல்வீர்கள். வாய்ப்புககளை விரைவாக நெருங்குவீர்கள். பல வாய்ப்புக்கள் உங்களை நாடி வரும். தொட்டதெல்லாம் துலங்கும். கடந்தவை கடந்தவைதான் அதைப் பற்றிக் கவலைப்பட்டுச் சோர்ந்து போய் நின்றால் எதனையும் சாதிக்க முடியாது. எதிர்காலம் இருள் சூழ்ந்து சூனியமாகிவிடும்.

'மயக்கமா கலக்கமா மனதிலே குழப்பமா' மனதில் குழப்பம் இருந்தால் வாழ்க்கையில் சாதிக்க முடியாது. முதலில் மனக் குழப்பத்திற்குத் தீர்வு காண வேண்டும். மனக் குழப்பம் நம்மால் உருவாக்கப்படுவது. நாம் நமது மனதில் இடம் கொடுத்ததனால் வருவதே மனக் குழப்பம். உலகில் உள்ள எல்லோருக்கும் மனக் குழப்பம் வரலாம். அவர்களில் பலர் அதனை திட்டமிட்டுச் சிறப்பாகத் தீர்த்துக் கொள்கின்றனர். சிலர் குழப்பத்தோடு வாழ்கின்றனர். 'வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும், வாசல் தோறும் வேதனை இருக்கும், வந்த துன்பம் எதுவென்றாலும் வாடி நின்றால் ஓடுவதில்லை நமக்கும் கீழே உள்ளவர் கோடி நினைத்துப் பார்த்து நிம்மதி நாடு' இது கவிஞர் கண்ணதாசனின் பிரபலமான பாடலடி. இப்பாடல் மனச் சுமையோடு இருப்பவர்களுக்கு ஆறுதலைத் தருகிறது. எந்த ஒரு பிரச்சினைக்கும் பிரச்சினைக்குள்ளே தீர்வும் இருக்கும். அதனை அமைதியாக இருந்து தெளிவாக முழு நம்பிக்கையோடு சிந்தித்தால் தீர்வு நமக்குத் தென்படும். அதை விடுத்து மனம் போன போக்கில் பிரச்சினைக்கு வெளியில் நின்று சிந்திப்பதனால் தீர்வைக் கண்டு கொள்ள முடியாது. காலம் கடந்து கொண்டே செல்லும்.

வாழ்க்கையை அனுபவித்துச் சந்தோசமாக வாழ வேண்டும். ஆசை, பேராசைகளைத் தவிர்த்து கையடக்கமாக வாழும்போது சந்தோசம் பெருகும். நிம்மதி கிடைக்கும். அதை வைத்துக் கொண்டு இலக்கு நோக்கிப் பயணிக்க வேண்டும். உரிய வேளையில், உரிய சந்தர்ப்பத்தில், உரிய காலத்தில் உரிய கடமையை நிறைவேற்றாமல் சாட்டுப் போக்குச் சொல்லிக் காலத்தைக் கடத்தி கோட்டை விட்ட பின்னர் அதுபற்றிச் சிந்தித்து எந்தப் பயனுமில்லை. பருவத்தே பயிர் செய்வதை விடுத்துக் காலங்கடந்து முயற்சிப்பதானால் பயன் கிடைக்கப் போவதில்லை. பலர் வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளாமல் வாய்ப்பை இழந்தபின் கவலைப்பட்டு எநதப் பயனுமில்லை இதைத்தான் 'கண் கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம் செய்தல்' போன்றது என்பார்கள். நினைப்பதெல்லாம் நடப்பதுமில்லை. நடப்பதெல்லாம் நினைப்பதுமில்லை. வாப்புக்களும் அவ்வாறுதான். எதிர்பார்த்த போதும், எதிர்பாராத போதும் கிடைக்கலாம். முயற்சியின்றி எதிர்பார்க்காமல் கிடைக்கும் வாய்ப்பினால் அதன் முக்கியத்துவம் உணரப்படுவதில்லை. வாழ்க்கையும் அவ்வாறுதான். பல தடைகள், சவால்கள் பிரச்சினைகளைச் சந்தித்து வெற்றியடையும் போதுதான் வாழ்க்கையும் சுவாரசியமாக மாறுகிறது.

பலர் பரீட்சைக்குப் படிக்காமல் கிடைக்க இருந்த பதவியை, பதவி உயர்வை இழந்திருப்பார்கள். இன்னும் சிலர் தமது நடத்தையினால் தமது நீண்ட நாள் கனவை பறி கொடுத்திருப்பார்கள். இனனும் சிலர் தொழில் தலத்தில் எடுத்தெறிந்து பேசி தமக்குக் கிடைக்க இருந்த வாய்ப்பை இழந்திருப்பார்கள். செய்ய வேண்டிய கடமைப் பொறுப்பினை நிறைவேற்றாமல் பதவி உயர்வை இழந்திருப்பார்கள். 'உனது இன்றைய நிலைக்கு நீயே காரணம்' நீ இப்போது அனுபவிக்கும் துன்பம், துயரம், நோய், நொடி எல்லாவற்றுக்கும் நீயே காரணமாக இருந்திருக்கையில் மற்றவரைப் பழி கூறுவதில் என்ன பயன் இருக்கிறது. 'தன்னால் முடியும் என்ற நம்பிக்கையை வைத்து முழு முயற்சியோடு செயற்படுபவர் மற்றவர் இழந்த எவற்றினையும் சேர்த்துப் பெற்றுக் கொள்வார்' இதுதான் உண்மையுமாகும். இதனை உணர்ந்து வாழ்க்கையைத் திட்டமிட்டுச் வெயற்படுத்திக் கொள்வதனால் இலக்கை அடையலாம்.

விஞ்ஞான, தொழினுட்ப மாற்றமும் கண்டுபிடிப்புக்களும், ஊடகங்களின் பெருக்கமும் பலரைத் தனது மெய்யான வாழ்க்கையை வாழ விடாமல் தடுத்துப் போலியான வாழ்க்கைக்கு இட்டுச் சென்றிருக்கின்றன. பலர் தம்மிடம் இருப்பதற்குத் திட்டமிடாமல் பேராசையின் காரணமாகக் கடன் வாங்கி ஆடம்பரச் செலவு செய்து நிம்மதியை இழந்து நிற்கின்றனர். சிலர் கடன் சுமை காரணமாக அவமானப்பட்டுக் கொண்டு தினமும் துன்பத்தோடு வாழ்கின்றனர். ஏமாற்றுக்காரர்களிடம் ஏமாந்து சந்தோசத்தை இழந்து சிலர் வாழ்கின்றனர். பலர் நண்பர், நண்பிகளின் கருத்துக்குச் செவிமடுத்து தமது அமைதியான வாழ்க்கையைப் பறிகொடுத்து நிற்கின்றனர். சிலரின்மீது கொண்ட அதீத நம்பிக்கை காரணமாக அவர்களின் கைப்பொம்மைகளாகி இருந்ததையும் இழந்து நிற்கின்றனர். தாம் இழந்த சந்தோசத்தை பற்றிச் சிந்தித்துப் பார்த்தால் அவர்களுக்குப் பல உண்மைகள் தெரியவரும். ஆடம்பரமும் சுகபோக வாழ்க்கையும், அதிக எதிர்பார்ப்பும் பலரை நிர்க்கதி நிலைக்குக் கொண்டுபோய் நிறுத்தி இருக்கின்றன. பலர் வீட்டில் நடைபெறும் ஒவ்வொரு சடங்குகளையும் ஆடம்பரமாக நடத்தி முடிக்கின்றனர். இவ்வாறு கடன்பட்டு நிகழ்வுகளைச் செய்தவர்களில் பலர் பல சுமைகளோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

பெரும்பாலானோர் தமது எதிர்காலத்தையும் சந்தோசமான வாழ்க்கையையும் பற்றிச் சிந்திக்காமல் ஊதாரிச் செலவு செய்து ஆடம்பரமான வாழ்க்கை நடாத்திப் பிள்ளைகளுக்குக் கேட்டதெல்லாம் வாங்கிக் கொடுத்து பிள்ளைகளின் எதிர்காலத்தையும் கேள்விக் குறியாக்கி சந்தோசததை இழந்து நிற்கின்றனர். பிள்ளைகளுக்குப் பொதி செய்யப்பட்ட உணவு-(-J-u-nk Fo-o-d-), துரித உணவு(-Fast Fo-o-d) ஆகியவற்றைத் தினமும் கடைகளில் வாங்கிக் கொடுத்து வீட்டுச் சமையலைச் சாப்பிடாமல் ஆக்கிவிட்டனர். நாட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாக வாழ்கைச் செலவு அதிகரிதத்தனால் துரித உணவுகள் கொடுக்க முடியாத நிலை வந்ததனால் பல பிரச்சினைகளை எதிர் நோக்கிக் கொண்டிருக்கின்றனர். பிள்ளைகளுக்கு மெய்நிகர்(-Z-o-om) வகுப்புகளுக்காக சிமார்ட் கைப்பேசி வாங்கிக் கொடுத்துப் பல பெற்றோர் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் ஏமாந்து நிற்கின்றனர். பலர் சமூக ஊடகங்களுக்கு அடிமையாகிக் காலத்தையும், நேரத்தையும், படிப்பையும் வீணாக்கி நிற்கின்றனர். இதனால் பலருக்குக் கண்பார்வை இழப்புச் சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்பட்டுக் கொண்டிருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன.

பெரும்பாலானோர் கடந்த காலத்தில் திட்டமிட்டுச் சிறந்த தீர்மானங்களை எடுத்து, நடைமுறைப்படுத்தி வரவுக்கேற்ற செலவு செய்து, தமது வாழ்க்கையை வாழாததன் காரணமாகத் தற்போது பல இழப்புக்களோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். வாழ்க்கையில் இழந்த சந்தோசம், மகிழ்ச்சி, நிம்மதி என்பவற்றைப் பற்றித் தெரிந்து கொள்ள ஒரு கணம் பன்நோக்கிச் சிந்தித்துப் பார். நாம் இழந்த இழப்புக்கள் யாவும் உன் மனதில் தோன்றும். இந்த அனுபவப் பாடத்தைச் சரியாக விளங்கிக் கொண்டு எதிரகாலத்தைத் திட்டமிட்டுச் செயற்படுத்தினால் சந்தோசமாக வழலாம்.

*தொழிலை நேசித்து அர்ப்பணிப்போடு*
*பணியாற்றினால்*
*செய்யும் தொழிலும் கூடத் தெய்வமாகலாம்*

**செய்யும் தொழிலே தெய்வம் தொடரும்..**

# கிழக்கு மாகாண பெண்களுக்கான எறிபந்து போட்டியில் கல்முனை கார்மல் பற்றிமா சம்பியன்





**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான எறிபந்து போட்டி ஏறாவூர் பொது விளையாட்டரங்கில் இடம்பெற்ற போது அரையிறுதிப் போட்டியில் அம்பலாந்துறை மகா வித்தியாலயத்தையும், இறுதிப் போட்டியில் மட்டக்களப்பு புனித சிசிலியா பெண்கள் கல்லூரியையும் வெற்றி கொண்டு கல்முனை கார்மல் பற்றிமா கல்லூரி 20 வயதிற்குட்பட்ட பெண்கள் அணி தேசிய மட்ட போட்டிகளில் பங்கேற்கும் சந்தர்ப்பத்தை பெற்றுள்ளது.

கல்லூரி அதிபர் எஸ்.ஈ.றெஜினோல்ட் தலைமையிலான கல்வி சமூகம் வெற்றியீட்டிய மாணவர்களுக்கும், பயிற்சி வழங்கிய உடற்கல்வித்துறை ஆசிரியர்களுக்கும் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர்.

# மருதமடு ஆலயப் பகுதியில் கத்தோலிக்க தொலைக்காட்சி தொகுப்பாளர் திடீர் மரணம்

**( வாஸ் கூஞ்ஞ)**

மன்னார் மறைமாவட்டத்தின் மருதமடு அன்னையின் ஆவணி மாதத்தின் பெருவிழாவை நேரலையாக ஒளிப்பரப்பும் மன்னார் கத்தோலிக்க ஊடக தொகுப்பாளர் திடீர் மரணம்.

இச்சம்பவம் ஞாயிறு (13) இரவு மருதமடு அன்னையின் ஆலயப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

மன்னார் மருதமடு அன்னையின் வருடாந்த ஆவணி பெருவிழா கடந்த 06.08.2023 அன்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

இப்பெருவிழா செவ்வாய்கிழமை 15.08.2023 அன்று காலை பெருவிழாத் திருப்பலியுடன் நிறைவுபெறுகின்றது.



இப்பெருவிழா கத்தோலிக்க நிகழ்வுகளை நேரலையாகத் தொகுத்து அனுப்பும் நபரான இவர் மன்னார் நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள புதுக்கமத்தைச் சேர்ந்த ஜெகநாதன் டிரோன் (வயது 28) என்ற நபரே திடீர் மரணத்துக்கு உள்ளாகியுள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை (13) இரவு எட்டாம் நாள் நவநாள் ஒளிப்பரப்பு நிகழ்வுகளை முடித்துவிட்டு மடுவில் தனது நண்பர்களுடன் இரவு 11 மணியளவில் உரையாடிக் கொண்டிருந்தபோதே இவர் திடீரென மரணித்துள்ளதாக ஆரம்ப விசாரணையில் தெரியவந்துள்ளது.

இவரின் சடலம் தற்பொழுது மடுவிலிருந்து மன்னார் பொது வைத்தியசாலைக்கு உடற்கூற்று பரிசோதனைக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரம் தெரிவித்துள்ளது.

# திருகோணமலையில் போதை ஒழிப்பு தொடர்பில் வீதியோர நாடகம்



**(ஹஸ்பர்)**

திருகோணமலை பெரியகுளப் பகுதி கிராமத்தில் போதை ஒழிப்பு தொடர்பான வீதியோர நாடகமொன்று (12) இடம் பெற்றது.குறித்த நிகழ்வினை லீட்ஸ் நிறுவனத்தினர் ஏற்பாடு செய்திருந்தனர். சமூக மட்ட அடிப்படையிலான சிறுவர் தலைமைத்துவ செயத்திட்டத்தினை குறித்த நிறுவனமானது குச்சவெளி பிரதேச செயலகத்துகுட்பட்ட 6 கிராமங்களில் செயற்படுத்தப் பட்டு வருகிறது. நாவற்சோலை, சலப்பையாறு, பெரியகுளம், திருமால்புரம், அடம்போடை மற்றும் வேலூர் கிராமங்களில் உள்ள பிள்ளைகள் தங்களுடைய கிராமங்களில் உள்ள பிரச்சைனைகளை அடையாளம் கண்டு அவற்றை குறைப்பதற்கான வழிமுறைகளான வீதி நாடகமாகவும் போஸ்டர் பிரச்சாரமாகவும் திருமால்புரம் கிராமத்தில் விழிப்புணர்வு நடைமுறைப்படுத்தப்பட்டது. போதை பாவனையால் ஏற்படும் தீய விளைவுகள் குடும்பம் சமூகத்தில் பாதக பாதக விளைவுகளை எப்படி ஏற்படுத்துகிறது என்பது தொடர்பில் இவ் வீதியோர நாடகத்தில் எடுத்துக்காட்டப்பட்டது இதனை சிறுவர் மட்ட கழக உறுப்பினர்கள் பல கதாபாத்திரங்களை வைத்து திறம்பட நடித்து காட்டியுள்ளனர். இதில் லீட்ஸ் நிறுவன திட்ட இணைப்பாளர் ஏ.ஆர்.எம்.தஸ்லீம், கிராம மக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# மட்டக்களப்பில் பண மோசடி செய்த போலி முகவர் வீட்டை முற்றுகையிட்டு முகவரை கைது செய்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அதிகாரிகள்!

**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பில் வெளிநாட்டுக்கு வேலைவாய்ப்புக்கு அனுப்புவதாக ஒருவரிடம் 4 இலச்சத்து 50 ஆயிரம் ரூபா வீதம் 22 பேரிடம் சுமார் ஒரு கோடி ரூபா பணமோசடி செய்த அமிர்தகழி பிரதேசத்திலுள்ள போலி முகவர் ஒருவரின் வீட்டை ஞாயிற்றுக்கிழமை (13) கொழும்பில் இருந்து வந்த வேலைவாய்ப்பு பணியகத்தினரால் முற்றுகையிட்டு போலி முகவர் ஒருவரை கைது செய்துள்ளதாக மட்டு தலைமையக பொலிசார் தெரிவித்தனர்

கொழும்பு வேலைவாய்பு பணியகத்தில் மட்டக்களப்பு அமிர்தகழி பிரதேசத்தைச் சேர்ந்த போலி முகவரிடம் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக தலா ஒருவர் 4 இலச்சத்து 50 ஆயிரம் ரூபாவை வழங்கிய நிலையில் அவர் வெளிநாட்டுக்கு அனுப்பாது ஏமாற்றி வந்த நிலையில் போலி முகவருக்கு எதிராக இருவர் முறைப்பாடு செய்திருந்தனர்.

இது தொடர்பாக வெளிநாட்டு வேலைவாப்பு பணியக அதிகாரிகள் தொடர் விசாரணையில் குறித்த நபர் தலா 4 இலச்சம் ரூபா வீதம் 22 பேரிடம் பணமோசடியில் ஈடுபட்டதை கண்டறிந்தனர்.

இதனை தொடர்ந்து வெளிநாட்டு வேலைவாப்பு பணியக அதிகாரிகள் மட்டக்களப்பு தலமையப பொலிஸாரின் உதவியுடன் குறித்த போலி முகவரின் வீட்டை முற்றுகையிட்டு கைது செய்து மட்டு தலைமையக பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்று விசாரணையின் பின்னர் அவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

# புலம்பெயர்ந்து சுவீஸ் நாட்டில் வாழும் வங்காலை புனித ஆனாள் குழுவினரால் மாணவர்களின் கல்விக்கு உதவி





**( வாஸ் கூஞ்ஞ)**

புலம்பெயர்ந்து சுவீஸ் நாட்டில் வாழும் வங்காலை புனித ஆனாள் கல்வி மற்றும் சமூக அபிவிருத்தி குழுவானது கடந்த அன்மைக் காலமாக மன்னாரில் பலதரப்பட்ட அபிவிருத்தி பணிகளை வங்காலை புனித ஆனாள் கல்வி மற்றும் சமூக அபிவிருத்தி குழுவின் பங்குபற்றுதலுடன் மேற்கொண்டு வருகின்றது.

இதில் ஒரு கட்டமாக கடந்த செவ்வாய் கிழமை (08) மடு கல்வி வலயத்திலுள்ள மிகவும் பின்தங்கியுள்ள கிராமமான மன்.சின்னப் பண்டிவிரிச்சான் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவர்களுக்கான காலணிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இப்பாடசாலையின் அதிபர் திரு.லதிஸ்லாஸ் அமலானந்தகுமார் அவர்களினதும் மற்றும் அவரின் தலைமை கொண்ட பாடசாலை ஆசிரியர்களின் நெறிப்படுத்தலிலேயே பயண்பெற்ற பெற்றோர் முன்னிலையில் வங்காலை புனித ஆனாள் கல்வி மற்றும் சமூக அபிவிருத்தி குழுவினர் காலணிகளை வழங்கி வைத்தனர்.

இம்மாணவர்களின் காலணிகளுக்கு 138850 ரூபா தேவைப்பட்டபோதும் சுவீஸ் நாட்டில் வாழும் திரு பவுல் , திரு.மயூரன் தலா 36 ஆயிரம் ரூபாவும் வங்காலை சுவீஸ் குழு 66850 ரூபாவும் பங்களிப்பு செய்திருப்பதாகவும் இதன்மூலம் 44 மாணவர்கள் பயண்பெற்றுள்ளதாக இதன் இணைப்பாளர் திரு.சுனேஸ் சோசை தெரிவித்தார்.

# பாகிஸ்தான் சுதந்திரத்தின் 76 வது ஆண்டு விழா





**(அஷ்ரப் ஏ சமத்)**

இலங்கையில் உள்ள பாகிஸ்தான் இஸ்லாமிய குடியரசின் உயர் ஸ்தானிகர், மேஜர் ஜெனரல் (ஓய்வு நிலை) உமர் பாரூக் பர்கி பாகிஸ்தானின் தேசியக் கொடியை ஏற்றி இந்நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். அத்துடன் பாகிஸ்தான் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரின் விசேட செய்திகள் வாசிக்கப் பட்டது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு நிலை) உமர் பாரூக் பர்கி பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுபிணைப்பானது வரலாற்றில் ஆழமானது.முன்னேற்றம் மற்றும் வளர்ச்சியை நோக்கியது பாக்கிஸ்தான் உயர் ஸ்தாணிகர் ஆலயம் இலங்கையில் பல்வேறு சமூக அபிவிருத்தி, விளையாட்டு, பாதுகாப்பு பயிற்சி மற்றும் கல்வி அபிவிருத்தித் திட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து உதவி வருகின்றது பாக்கிஸ்தானுக்கு சுதந்திரம் பெற்றுக் கொடுத்த முஹம்மத் அலி ஜின்னாவினை நினைவு கூர்ந்து இன்றைய சுதந்திர தினத்தினை பாக்கிஸ்தானியர்கள் கொண்டாடுகின்றார்கள். இலங்கை பாக்கிஸ்தான் இராஜதந்திர பாதுகாப்பு மற்றும் கலாச்சார உறவுகளை தொடர்ந்து வளர்த்து வரும் அதே வேளையில், சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின்கட்டமைப்பிற்குள் வர்த்தகம் மற்றும் இருதரப்பு முதலீட்டை மேம்படுத்துவதன் மூலம், இரு நாடுகளுக்கு இடையே பொருளாதார இணைப்புகளை விரிவுபடுத்தவும் வழிகளை ஆராய்ந்து வருகிறோம் என்று குறிப்பிட்டார்.

# நிந்தவூரில் சர்வதேச இளைஞர் தினம்!

**( எம்.எம்.றம்ஸீன்)**

நிந்தவூரில் சர்வதேச இளைஞர் தினத்தை முன்னிட்டு நிந்தவூர் பிரதேச செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட சினேகபூர்வ, சமாதான, நல்லிணக்க கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை நிந்தவூர் அல்-மதீனா தேசிய பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.

நிந்தவூர் பிரதேச இளைஞர் சேவைகள் அதிகாரி எம்.ஐ.எம்.பரீட் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நிந்தவூர் பிரதேச செயலாளர் ஏ.எம்.அப்துல் லத்தீப் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

மேலும் இந்நிகழ்வில் மாவட்ட இளைஞர் சேவைகள் அதிகாரிகளான ஏ.முபாறக் அலி, டீ.எம்.சமரசேகர ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும், நிந்தவூர் பிரதேச செயலக நிருவாக கிராம சேவக உத்தியோகத்தர் ஏ.எல்.பைரூஸ், அல்-மதீனா தேசிய பாடசாலை அதிபர் ஏ.எம். ஹில்மி, அட்டப்பள்ளம் சஹிதா வித்தியாலய முன்னாள் அதிபர் ஏ.எல்.ஏ.றபீக் பிர்தௌஸ், அல்-மினா வித்தியாலய அதிபர் எம்.எச்.எம்.ஏ.றாபிஊ, ஆலையடிவேம்பு பிரதேச செயலக இளைஞர் சேவைகள் அதிகாரி செல்வி.எஸ்.சுபாசினி ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



# வீரமுனை படுகொலை தொடர்பான வழக்கினை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும்!

## ஜனாதிபதிக்கு வீரமுனை மக்களின் பகிரங்க மடல்!

(வி.ரி.சகாதேவராஜா)

வீரமுனை படுகொலை தொடர்பான வழக்கினை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும் என்று கோரும் 'வீரமுனை மக்களின் நீதிக்கான கோரிக்கை' என்ற தலைப்பிலான பகிரங்க மடல் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த பகிரங்க மடல் கடந்த சனிக்கிழமையன்று இடம்பெற்ற வீரமுனை படுகொலையின் 33வது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வில் பகிரங்கமாக வாசித்து பொது மக்களால் அங்கீகரிக்கப்பட்டது.

அந்த பகிரங்க மடலில் விடுக்கப்பட்ட கோரிக்கைகளாவன..

01. இப்படுகொலை தொடர்பான வழக்கினை இலங்கை அரசாங்கமானது முன்னெடுக்க வேண்டும்

02. பாதிக்கப்பட்டவர்களுக்கான நியாயமான நீதி கிடைக்கப் பெற வேண்டும்

03. குற்றம் இழைத்தவர்களை நீதிக்கு முன் நிறுத்தி தண்டனை வழங்க வேண்டும்

04. இம்மக்களின் தொடர் நினைவேந்தல்களை அனுஸ்டிப்பதற்கான பாதுகாப்பினை உறுதி செய்ய வேண்டும்

05. மீண்டும் நிகழாமைக்கான உத்தரவாதம் வழங்கப்பட வேண்டும். அதற்கான அரச தரப்பு முன்னெடுப்புகளை அறிவித்தல் வேண்டும்.

அதேவேளை,ஜனாதிபதிக்கான அந்த மடலில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது.

இலங்கையின் கிழக்கு மாகாணத்திலுள்ள அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள வீரமுனை கிராமத்தில் உள்ள ஆலயங்களிலும் பாடசாலைகளிலும் யுத்த அனர்த்தம் காரணமாக இடம்பெயர்ந்திருந்து தஞ்சமடைந்திருந்த வீரமுனை, மல்வத்தை, வளத்தாப்பிட்டி, மல்லிகைத்தீவு, வீரச்சோலை ஆகிய கிராமங்



களைச் சேர்ந்த சிறுவர்கள்,பெண்கள் அடங்கலாக 55 பேர் 1990.08.12 அன்று இலங்கை இராணுவத்துடன் அந்தக் காலப்பகுதிகளில் சேர்ந்து இயங்கி வந்த ஊர்காவல் படையினரால் வெட்டியும், குறிப்பாக சிறுவர்கள் சுவற்றில் அடித்தும் கொல்லப்பட்டதாக கண்களால் கண்ட உரிய கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் காயப்பட்டவர்கள் வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சாட்சியங்களை அழிக்கும் நோக்குடன் காணாமலும் ஆக்கப்பட்டதாகவும் உயிர் தப்பியவர்களால் கூறப்படுகின்றது.

இன்றுடன் இந்த மக்கள் கொல்லப்பட்டு 33 வருடங்கள் நிறைவு பெற்ற நிலையில் இப்படுகொலைகளுடன் தொடர்புபட்டவர்கள் இன்னும் நீதிக்கு முன் நிறுத்தப்படாமல் இருப்பதுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியும் மறுக்கப்பட்ட நிலையே காணப்படுகின்றது.

இதன் காரணமாக உரிய பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்களும் நலன்விரும்பிகளும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கப் பெறவேண்டும் என வலியுறுத்தி இன்றைய நாளில்(ஆவணி 12) வருடா வருடம் இலங்கை தேசத்திற்கும் சர்வதேசத்திற்கும் வலியுறுத்திய வகையில் நினைவேந்தல்களை பல வகையான சவால்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் மேற்கொண்டு வருகின்றோம்.

எனவே இலங்கை அரசாங்கமானது இவ்வாறான சம்பவங்களுக்கு முழுமையாக பொறுப்புக் கூறக் கடமைப்பட்டிருக்கின்று என்பதனை இந்த இடத்தில் ஞாபகப்படுத்த விரும்புகின்றோம்.

குறிப்பாக இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் கடந்த யுத்த காலப்பகுதிகளில் இது போன்ற படுகொலைகள் தமிழர் பகுதிகளில் பல இடங்களில் இடம்பெற்றிருக்கின்றது.

குறிப்பாக கிழக்கு மாகாணத்திலுள்ள மட்டக்களப்பு மயிலந்தனை படுகொலை மற்றும் திருகோணமலை குமாரபுரம் படுகொலை ஆகியவற்றிற்காக இலங்கை நீதி மன்றங்களில் கண்கண்ட சாட்சியங்களுடன் வழக்கு தாக்கல்கள் மேற்கொண்ட போதும் உரிய பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கப் பெறாமல் மறுக்கப்பட்ட வேதனையான சம்பவத்தினையும் இவ்விடத்தில் குறிப்பிட விரும்புகின்றோம்.

அதே போன்றே இன்றைய தினம்(2023.08.12) இம்மக்கள் படுகொலை செய்யப்பட்டவர்களின் 33 ஆண்டு நினைவேந்தலினை மேற்கொள்ளப்பட்டது.

எனவே, வீரமுனை படுகொலை நடந்து இன்று 33ஆம் ஆண்டு நினைவு தினத்தில் மீளவும் நீதிக்காக தங்களிடம் கோரிக்கை வைக்கிறோம். இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

# மடு ஆலய சூழலில் தங்கியிருப்போர் விஜந்துக்கள் மட்டில் எச்சரிக்கையுடன் இருக்கவும்

## பணிப்பாளர் த.வினோதன்

(வாஸ் கூஞ்ஞ)



மன்னார் மருதமடு ஆலயப் பகுதியில் கடந்த ஓரிரு தினங்கள் ஒரு சில மணி நேரம் பெய்த மழை காரணமாக பல்வேறுபட்ட விஷ ஜந்துக்கள் வெளியேறியமையால் மடு ஆலய சூழலில் தங்கியிருப்போர் விஷ ஜந்துகளால் ஒரு சிலர் பாதிக்கப்பட்டமையால் இங்கு தங்கி வாழ்வோர் விழிப்புடன் இருக்கும்படி மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் தெரிவித்தார்.

மன்னார் மறைமாவட்டத்தின் மருதமடு அன்னையின் ஆவணி மாதம் பெருவிழாவுக்கு (15) ஏழு லட்சம் பக்தர்கள் வருவதாக எதிர்பார்க்கப்பட்ட நிலையில் ஞாயிற்றுக் கிழமை வரை சுமார் இரண்டு லட்சத்துக்கு மேற்பட்டோர் வருகை தந்து ஆலய சூழலில் கூடாரங்கள் அமைத்து தங்கியுள்ளனர்.

இந்த நிலையில் கடந்த இரு தினங்கள் மடுப் பகுதியில் இடையிடையே பெய்து வரும் பரவலான மழை காரணமாக தமது வாழ்விடங்களில் வசிக்க முடியாது பல்வேறுபட்ட விஷ ஜந்துக்கள் வெளியேறிவரும் நிலை காணப்பட்டு வருவதாகவும் இதன் காரணமாக பக்தர்கள் விஷ ஜந்துக்களால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறும் சம்பவங்களும் அதிகரித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டு வரும் நிலையில் மருதமடு ஆலய சூழலில் தங்கியுள்ள பக்தர்கள் இது தொடர்பாக விழிப்புடன் இருக்குமாறு மன்னார் பிராந்திய சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.வினோதன் தெரிவித்திருப்பதுடன்.

ஏதாவது தெரியாத அல்லது அடையாளங்காணப்பட்ட விஷ ஜந்துக்களால் கடியுண்டவர்கள் உடனடியாக மடு தேவாலயத்தில் அமைந்துள்ள வைத்திய சாலைக்கு சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர் எனவும் மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

# இந்துமத எழுச்சியுடன் காரைதீவு- மண்டூர் திருத்தல பாதயாத்திரை



(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவில் இருந்து மண்டூர் முருகன் ஆலயத்திற்கான திருத்தல பாதயாத்திரை இந்துமத எழுச்சியுடன் எதிர்வரும் 26 ஆம் தேதி சனிக்கிழமை காலை சிறப்பாக நடைபெற உள்ளது.

காரைதீவு அடியார்களுடன் அட்டப்பள்ளம், திராய்க்கேணி, வீரமுனை ஆகிய கிராம மக்களும் கலந்து கொள்வது வழக்கம்.

முருகப்பெருமான் திருவுருவப் படங்கள் தாங்கிய அலங்கரிக்க பட்ட ஏழு உழவு இயந்திரங்கள் முன்னதாக செல்ல, அடியார்கள் 'அரோகரா' கோசம் விண்ணைப்பிளக்க, நந்திக் கொடி தாங்கி ,.பஜனைப் பாடல்கள் சகிதம் பாதயாத்திரை சுமார் மூன்று கிலோ மீட்டர் தூரம் அடியார்கள் வரிசையில் செல்வது வழமை.

26 ஆம் தேதி அதிகாலை நான்கு மணியளவில் மாவடி ஸ்ரீ கந்த சுவாமி ஆலயத்தில் இருந்து புறப்படும் பாதயாத்திரை ஐந்து மணியளவில் கண்ணகை அம்மன் ஆலயத்தை அடைந்து அங்கிருந்து கல்முனை தரவைப் பிள்ளையார் ஆலயம் , ஸ்ரீ முருகன் ஆலயத்தை அடைந்து நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு ,கிட்டங்கி, சவளக்கடை ,நாவிதன்வெளி, வேப்பயடி , தம்பலவத்தை சென்று மண்டூர் ஆலயத்தை சென்றடையும்.

காரைதீவு இந்து சமய விருத்தி சங்கம் ஏற்பாடு செய்து வருகிறது.

# சிறுவர் சித்திர போட்டியில் செந்நெல் சாஹிரா சாதனை

( வி.ரி.சகாதேவராஜா)

அகில இலங்கை பாடசாலை மாணவர்களுக்கிடையிலான சிறுவர் சித்திரப்போட்டி 2022 யில் சம்மாந்துறை வலயப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் சம்மாந்துறை செந்நெல் சாஹிரா மகாவித்தியாலயத்தில் இருந்து பங்குபற்றி வலய மட்டத்தில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் விழா கல்லூரியின் அதிபர் யு.எல். முஹம்மட் இஸ்மாயில் தலைமையில் நேற்று (14) திங்கட்கிழமை நடைபெற்றது.

விழாவில் பாடசாலையின் இணைப்பாளர் எம்.எம்.எம். ஜெளபர், சம்மாந்துறை வலயக் கல்வி அலுவலகத்தின் சித்திரப்பாட இணைப்பாளர் எஸ்.எல் அப்துல் முனாப், ஆசிரியையான ஜனாபா எஸ்.எல் ஜன்னத் முன்னிலையில் இன்று மாணவர்களுக்கு வழங்கிவைக்கப்பட்டது.



# கனடாவில் காரைதீவு ஒன்று கூடல்




( வி.ரி.சகாதேவராஜா)

கனடா வாழ் காரைதீவு மக்கள் ஒன்றிய வருடாந்த ஒன்றுகூடல் நேற்று முன்தினம் ரொரன்ரோவில் நடைபெற்றது.

அங்கு விளையாட்டு விழாவும் இடம்பெற்றது. வைத்திய கலாநிதி அ.வரதராசா பேராசிரியர் இ.பாலசுந்தரம் உள்ளிட்ட பிரமுகர்கள் பங்கேற்றவர்களுக்கு பரிசுகளும் வழங்கி வைத்தனர்.

புதிய அங்கத்தவர் பொறியியலாளர் கணேசராஜா விதுசனும் கலந்துகொண்டார்.

# உலக யானைகள் தினத்தை முன்னிட்டு அம்பறை மற்றும் உகனை பிரதேசங்களில் கார்டூன் சித்திரக் கண்காட்சி




(அஸ்ஹர் இப்றாஹிம்)

உலக யானைகள் தினத்தை முன்னிட்டு அம்பாறை வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களம் பிரதேச செயலகங்களுடன் இணைந்து ஒழுங்கு செய்யப்பட்டிருந்த காட்டூன் சித்திரக் கண்காட்சி அம்பாறை மற்றும் உகனை பிரதேசங்களில் கடந்த சனிக்கிழமை (12) இடம்பெற்றது.

இலங்கையில் அருகிக் கொண்டு செல்லும் யானைகளை பாதுகாப்பதுடன், மனித யானை மோதலையும் தவிர்க்கும் வகையில் அனைத்தையும் உள்ளடக்கிய கார்டூன் சித்திரங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், அரச தனியார் துறை ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் பெருமளவில் கண்காட்சியினை கண்டு களித்தனர்.

யானைகளுடன் பழகுதல், அன்பு செலுத்துதல், அவற்றுக்கு உணவளித்தல், பாதுகாத்தல் தொடர்பில் இங்கு விளக்கமளிக்கப்பட்டன.

# கலாநிதி கல்லாறு சதீஸ் எழுதிய 'பனியும் தண்டனையும்' சிறுகதைத் தோகுப்பு

# தமிழ் நாட்டின் டிஸ்கவரி பதிப்பகத்தால் வெளியிடு




















கலாநிதி கல்லாறு சதீஸ் எழுதிய 'பனியும் தண்டனையும்' எனும் சிறுகதைத் தொகுப்பு தமிழ் நாட்டின் டிஸ்கவரி பதிப்பகத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த அண்மையில் நூல் வெளியீட்டு விழாவும், நூல்கள் அன்பளிப்பும் கோட்டைக்கல்லாறு மகாவித்தியாலயத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

கிழக்கு மாகாண ஆளுநர் திரு. செந்தில் தொண்டமான் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக பதிப்பக உரிமையாளர் திரு.மு.வேடியப்பன், மற்றும் ஒளிப்பதிவாளர் திரு.பொன் காசிராஜன் ஆகியோர் சென்னையிலிருந்து வந்து கலந்து கொண்டார்கள்.

நூலினைத் திரு.வேடியப்பன் வெளியிடக் கோட்டைக்கல்லாறு மக்களின் சார்பில் ஆலயங்களின் தலைவர்(வண்ணக்கர்) திரு.விநாயகமூர்த்தி மற்றும் சதீஸின் பெற்றோர்கள் பெற்றுக்கொண்டார்கள்.



குறிப்பிட்ட தொகைப் பிரதிகள் மண்டபத்தில் அமர்ந்திருந்த விருந்தினர்களுக்கு அவர்கள் அமர்ந்திருந்த இடத்திற்குச் சென்று வழங்கப்பட்டதன் மூலம் நேரத்தை மிகுதிப்படுத்திக் கிழக்கு மாகாண ஆளுநரின் தலைமையுரைக்கான நேர முன்னேற்பாடு செய்யப்பட்டது.

விழாவில் வரவேற்புரையை கோட்டைக்கல்லாறு மகாவித்தியாலய அதிபர் திரு.சசிதரனும், வாழ்த்துரைகளை கோட்டைக்கல்லாறு ஆலயங்களின் தலைவர் திரு.விநாயகமூர்த்தி, பட்டிருப்புக் கல்வி வலைய பணிப்பாளர் திரு.சிறிதரன், களுவாஞ்சிக்குடிப் பிரதேச செயலாளர் திருமதி.சிவப்பிரியா வில்வரெட்ணம், அம்பாரைவில் ஆலயத் தலைவர் திரு .சோதீஸ்வரன், மட்டக்களப்புத் தமிழ்ச்சங்கத் தலைவர் திரு.ரஞ்சிதகுமார், சேவ் த சில்றன் அதிகாரி திரு.ஜேசுசகாயம், கிழக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழு செயலாளர் திரு. மூ.கோபாலரட்ணம் ஆகியோரும் வழங்க, வாழ்த்துக்கவிதையை நவீன மரபுக் கவிஞர் டாக்டர் செல்லையா வாமதேவன் நிகழ்த்த ,தமிழ் பேசுவோருக்கான ஜேர்மன் இலக்கணம் எனும் நூலை எழுதிய மதி கணபதிப்பிள்ளை, ராபா பல்கலைக்கழக வளாக இயக்குனர் அரூஸ் ஆகியோர் உட்பட விருந்தினர்கள் பொன்னாடை போற்றிக் கௌரவிக்கப்பட்டார்கள்.

# மட்டக்களப்பு மாநகர சபையை கைப்பற்ற தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் வைத்த சுருக்கு

## சுருக்கில் சிக்கிய ஐ.தே.க.

2018 சித்திரை 1ம் திகதி அளவில் ..... அன்றைய பிரதமர் ரணில் அவர்கள் என்னிடம் கூறிய விடயம் மட்டக்களப்பு மாவட்டத்தில் முடியுமான முழு உள்ளூராட்சி சபைகளையும் தமிழ் தேசிய கூட்டமைப்பு கைப்பற்ற வேண்டும் என்பதாகும் அதற்கான செயற்பாடுகள் மிக தீவிரமாக நடைபெற்றது அதே வேளை TMVP சூட்சுமமாக சபைகளை கைப்பற்ற ரகசிய வேலைத் திட்டங்களை அதிரடியாக நடாத்தியது. எப்படியாவது மட்டக்களப்பு மாநகர சபையை கைப்பற்ற வேண்டும் என்று TNA யும் TMVP யும் கடும் முனைப்பு காட்டியது மறுநாள் (சித்திரை 4 என்று எண்ணுகிறேன்)மாநகர சபை தெரிவு இடம் பெற இருந்த நிலையில் SLFP மைத்திரியின் உறுப்பினர்களை தம்வசம் திருப்பியது TMVP . ஆதரவு தரும் யாரயாவது மேயராக்க ஆதரவு தருகிறோம் என்ற உத்தரவாதத்தை மற்ற கட்சிகளுக்கு TMVP வழங்கியது இதனை அறிந்த TNA தடுமாறியது. என்னை அவரது அலுவலகத்துக்கு அழைத்த தமிழரசு கட்சி செயலாளர் துரைராஜசிங்கம் விடயத்தை கூறினார். இரவு 11.00 மணி சுதந்திர கட்சிக்கு (SLFP )பொறுப்பாக இருந்த கிரி அவர்களிடம் சென்று அவரின் வீட்டில் பேசினேன் அவர் எனது யோசனையை மறுத்துவிட்டார் சிறைக்கு சென்று பிள்ளையானிடம் சகலவற்றையும் பேசி முடித்து விட்டதாக கூறினார். நான் உடனடியாக அப்போது நிதியமைச்சராக இருந்த ரவிகருணாநாயக்கவை தொடர்பு கொண்டு நிலையை கூறினேன் அவர் உடனடியாக SLFP கட்சி செயலாளருடன் பேசி நிலைமையை எமக்கு சாதகமாக்கி கொடுத்தார் மட்டக்களப்பு மாநகர சபைக்கு ஆதரவு தந்தால் செங்கலடி சபைக்கு சுதந்திர கட்சி ஆட்சி அமைக்க கூட்டமைப்பு ஆதரவு தரும் என்ற உத்தரவாதத்தை இருதரப்புடன் பேசி உடன்பாட்டை எட்ட வைத்தேன் ....

சபைகளை கைப்பற்ற விழித்து இருந்து உழைத்த ஸ்ரீநேசன், ஜனா, அரியம் .... கடைசி நேரத்தில் TMநகக்கு சார்பாகபல்டிஅடித்த ஐ.தே.கட்சி உறுப்பினர்கள்.... சரவணபவான் எப்படி முதல்வர் ஆனார் சுகா ரசியம்?....

சிறையில் இருந்து சிறப்பாக ஆடு புலி ஆட்டம் ஆடிய பிள்ளையான் விடிந்தால் மட்டக்களப்பு மாநகர சபைக்கான தெரிவுஇடம் பெற போகின்றது. அதிகாலை 1.00 மணி மாநகர சபையின் கூட்டமைப்பின் வெற்றியை உறுதி செய்த பின்னர் நான் செங்கலடியில் உள்ள எனது வீட்டுக்கு திரும்பி விட்டேன்

அதிகாலை வரை சிறிநேசன், ஜனா, அரியம் ,துரைராஜசிங்கம் ஆகியோர் விழித்து இருந்து யார் யாரை தவிசாளராக மற்றைய சபைகளுக்கு தெரிவது சம்பந்தமாக ஆலோசனை செய்து கொண்டு இருந்தனர் காலை 5.00 மணிக்கு எனக்கு ஒரு அழைப்பு வந்தது சூரியன் சின்னத்தில் போட்டியிட்ட ஒருவரை மட்டக்களப்பு மாநகர சபை முதல்வராக்க TMVP முடிவு செய்துள்ளதாகவும் ஐ.தே.கட்சியில் உள்ள ஒரு பெண்ணும், ஒரு ஆணும் TMVP யுடன் இணைந்த விட்டதாக தகவல் கிட்டியது.

குறிப்பிட்ட சூரியன் கட்சிகாரர் எனது உறவு முறையானவர் அவரை தொடர்பு கொண்டு நான் அவரை அவசரம் சந்திக்க வருவதாக கூறினேன் அவர் அதனை தவிர்ந்தாலும் எனது கட்டாயத்தால் ஏற்றுக்கொண்டார். காலை 6.00 மணிக்கு அவரை அவரது வீட்டில் சந்தித்தேன் அப்போது அவர் கூறிய விடயம் நாங்கள் எல்லோரும் ஒன்றாக பேசி முடிவு செய்து விட்டோம் கூஞுஙக ஆதரவுடன் நாம் ஆட்சி அமைப்பது உறுதி என்று கூறினார்.

ஐ.தே.கட்சியில் இருவர் தங்களுக்கு ஆதரவு அளிப்பதாகவும் கூறினார் இது எனக்கு பெரும் அதிற்சியாக இருந்தது இது எல்லாம் எப்படி நடந்தது என்று தேட ஆரம்பித்தேன் அப்போது ஒரு விடயம் தெரியவந்தது சிறையில் இருந்தவாறே பிள்ளையான் அவர்கள் இந்த ஆடு - புலி ஆட்டத்தை ஆடுவதாக அறிந்தேன்

இரவு விடிய, விடிய பிள்ளையான் சிறையில் இருந்தவாறே கை தொலைபேசி மூலம் சகலவற்றையும் வழி நடாத்துவதாக கண்டுபிடித்தேன் காலை 7.30 மணி அளவில் பிரதமர் ரணிலுடன் பேசி நிலவரத்தை தெரியப்படுத்தினேன் சற்று நேரத்தில் எனது கை தொலைபேசிக்கு ஒரு அழைப்பு வந்தது சிறைச்சாலை அமைச்சர் சுவாமிநாதன் என்னிடம் பிரதமரிடம் நான் கூறிய விடயத்தை கேட்டு அறிந்து கொண்டு உடனடியாக மட்டக்களப்பு சிறைச்சாலை அத்தியட்சகரை தொடர்பு கொண்டு உடன் நடவடிக்கை எடுப்பதாக, கூறினர்.

சுமார் பத்து நிமிடங்கள் கழித்து மட்டக்களப்பு சிறைச்சாலை அத்தியட்சகர் அக்பர் என்னிடம் கை தொலைபேசியில் கூறியதாவது பிள்ளையான் சார்பாக இனி எந்த பிழையும் நடக்காமல் நான் கவனமாக இருப்பேன் என்றும் உறுதி அளித்தார் இவ்விடயத்தை அமைச்சர் சுவாமிநாதன் அவர்களிடம் கூறுப்படி கூறினார். TMVP க்கு ஆதரவு தரும் இரண்டு ஐ.தே.கட்சி உறுப்பினர்களை தொடர்பு கொண்டால் அவர்களது கைத்தொலைபேசி நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தது. வீட்டுக்கு சென்று தேடினால் வீடுகள் பூட்டப்பட்டு இருந்தது. இத்னைக்கும் நேரம் நெருங்கி கொண்டு இருந்தது நான் உடனடியாக ஐ.தே, கட்சி செயலாளர் கபீர் காசிம் அவர்களுடன் உடன் தொடர்பை ஏற்படுத்தி இரண்டு ஐ. தே, கட்சி உறுப்பினர்கள் TMVP க்கு ஆதரவு அளிப்பதாக கூறினேன் அப்படியா ? என்று கேட்டுவிட்டு அவர்களுக்கு எதிராக கட்சி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் ஒழுக்காற்று நடவடிக்கை இரண்டாம் கட்டம் இப்போது என்ன செய்வது என்று கேட்டேன் உன்னால் ஏதும் செய்து தடுக்க முடிந்தால் முயற்சி செய் இது பற்றி கட்சி தலைவர் ரணிலுடன் பேசுகின்றேன் என்றார்

காலை 10.00 மணி மாநகர சபைக்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் வந்து கொண்டு இருக்கிறார்கள் தெரிவு செய்யப்பட்ட ஐ.தே.கட்சியின் 4 உறுப்பினர்களில் அந்த இரண்டு உறுப்பினர்களும் வரவில்லை விடயத்தை அறிந்த த.தே. கூட்டமைப்பினர் பரபரப்பாகினர் பிள்ளையானால் மட்டுமா ஆடு புலி ஆட்டம் ஆட முடியும்.

நாமும் ஆட்டத்தில் இறங்கினோம் அந்த சில நிமிடங்களில் ஆட்டம் இழந்தார் பிள்ளையான்..

### ரணிலை காப்பாற்றிய கூட்டமைப்பு - கூட்டமைப்பை காப்பாற்றிய ரணில்

இந்த சந்தர்பத்தில் எனக்கு உதவியாக என்னை சுற்றி பலர் இருந்தார்கள் அதில் முக்கியமானவர் கார்த்தி சசிதரன் மாநகர சபையின் கூட்டமைப்பின் வெற்றிக்காக என்னுடன் இருந்து பாடுபட்டவர்.

ஊராட்சி தெரிவில் கூட்டமைப்பை ரணில் அவர்கள் பெற்றி பெற வைப்பதற்கு மிகப்பெரிய காரணமாக இருந்தது இந்த தெரிவு இடம் பெறும் அண்மித்த நாளில் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் மீது பாராளுமன்றில் நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டு வர இருந்தது.

நம்பிக்கை இல்லா தீர்மானத்துக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆதரவு அளிப்பது என்றால் வட கிழக்கில் உள்ள சகல ஊராட்சிகளிலும் தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆட்சி அமைக்க ஐ.தே.கட்சி ஆதரவளிக்க வேண்டும் என்ற ஒரு உள்ளக நிபந்தனை இருந்தது.

இதனை அடிப்படையாக கொண்டு தான் இவ்வளவு வேலைகளும் தீவிரமாக நடைபெறுகிறது. அதிலும் மட்டக்களப்பு மாநகர சபையை TMVPயிடம் இழந்து விடக் கூடாது என்பதில் கூட்டமைப்பு மிக கவனமாக இருந்தது அதில் தான் அவர்களின் கௌரவம் தங்கி உள்ளது என்ற எண்ணம் கூட்டமைப்பு தலைமையிடம் அதீதமாக இருந்தது.

எப்பாடுபட்டாவது மட்டக்களப்பு மாநகர சபையை கூட்டமைப்பு கைப்பற்ற வேண்டும் என்பதில் கடும் முனைப்பு காட்டியது. TMVP மாவட்டத்துக்கான கட்சியாக இருந்தாலும் ,மிகச் சாதுரியமாக அரசியல் செயற்பாடுகள் இருந்தது.

தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு மிக சவாலாக இருந்தார்கள். மாவட்டத்தில் எந்த சபைகளிலும் கூட்டமைப்பு அறுதி பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும் நிலை இருக்கவில்லை. TMVP யும் கூட்டமைக்கு சமமான ஆசனங்களை அனேகமான சபைகளில் பெற்று இருந்தது. சுதந்திர கட்சியும் கணிசமான ஆசனங்களை கொண்டு இருந்தது.சுதந்திர கட்சியிடம் நேரடியாக சென்று ஆதரவு கேட்பது தங்களுக்கான கௌரவ குறைவு என்று கூட்டமைப்பு கருதியது.

அதற்காக இச்செயற்பாட்டுக்காக ஐ.தே.கட்சி ஊடாக கூட்டமைப்பினர் என்னை நம்பி இருந்தார்கள் அதே நேரம் பிரதமர் ரணில் அவர்கள் என் மீது கூடுதல் நம்பிக்கை கொண்டு இருந்தார் அவரின் நம்பிக்கையையும் தக்க வைக்க வேண்டிய கட்டாயம் எனக்கு இருந்தது. கார்த்தி சசிதரன் கட்சி மாறிய இரண்டு ஐ.தே. கட்சி உறுப்பினர்களின் குடும்பத்துடன் நல்ல நட்பை பேணி வந்தவர் அவர்கள் பற்றிய முழு தகவல் கார்த்தி அவரிடம் இருந்தது.

அந்த பரபரப்பான சூழலில் நேரம் 10.00 மணியை தொடப்போகிறது. அதிரடியான சில சம்பவங்கள் ரகசியமாக வெளியில் குறித்த நேரத்துக்குள் நடைபெறுகிறது (தணிக்கை) முத்தவெளி வீதி ஓரமாக வாகன குவியல்கள் , மாநகரசபை வளாகம் கட்சிகளின் ஆதரவாளர்களால் நிரம்பி வழிகிறது . நாலாபுறமும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு இருந்தது. சம்பந்தப்பட்டவர்கள் மட்டும் மண்டபத்துக்குள் நுழைந்துவிட்டார்கள். மாநகர சபையின் கீழ்தளத்தில் மாநகர சபை உறுப்பினர்கள் அமர்ந்து இருக்கிறார்கள். ஏராளமான ஊடகங்களும் அவர்களை சுற்றி நிற்கின்றன.

நாங்கள் பார்வையாளர்கள் அமரும் மேல் பல்கணியில் முன்வரியில் அமர்ந்து இருக்கின்றோம் எனது அருகில் துரைராஜசிங்கமும் அரியேந்திரன் அவர்களும் மறுபுறம் ஜனா, சிறினேசன் என பல தரப்பட்டவர்களும் பார்வையாளாக இருக்கின்றோம் கிழக்கு மாகாண ஊராட்சி ஆணையாளர், பிரதி ஆணையாளர் என பல அதிகாரிகள் மண்டபத்துக்குள் நுழைந்துவிட்டார்கள் கட்சி மாறிய இரண்டு உறுப்பினர்களையும் நான் மண்டபத்திற்குள் தேடுகின்றேன் அங்கே அவர்களை காணவில்லை.

நேரம் ஆரம்பம் என்று மணி ஒலிக்கிறது மணி ஒலிக்கும் நேரம் பார்த்து குறித்த கட்சி மாறிய இருவரும் சபையில் உள் நுழைகிறார்கள் அவ்வேளை மறுமுனையில் நின்று கொண்டு இருந்த TMVP கட்சி செயலாளர் பிரசாந்தன் அவர்கள் என்னைப் பார்த்து ஒரு சின்ன சிரிப்பு சிரிக்கிறார் அந்த சிரிப்பின் அர்த்தம் என் மனதில்பட்டு மண்டையில் கிர் என்று வலிக்கிறது....

### கழுத்தில் கயிறு இறுகும் நிலையிலும் சபை ஒழுக்கத்தை கடைப்பிடித்த தமிழ் தேசிய கூட்டமைப்பு

மட்டக்களப்பு மாநகர சபை மண்டபம் பரபரப்பாக காணப்பட்டது, யார் யார் குறித்த நேரத்துக்குள் கட்சி மாறிவிட்டார்கள், எப்போது என்ன நடக்கும் என்று தெரியாத நிலை இருந்தது. அதே நேரம் சுதந்திர கட்சிக்குள்ளும் சிறு குழப்பம் இருந்தது. மாநகரசபை மேயர் என்கின்ற பதவி ஆசையை சிலரிடம் TMVP விதைத்து விட்டது. அதாவது மேயர் பதவி என்னும் பட்டாம்பூச்சியை சிலர் மனங்களில் பறக்க விட்டு இருந்தனர். மண்டபத்துக்குள் அமர்ந்து இருந்த கட்சி மாறிய இரு ஐ.தே. கட்சி உறுப்பினரை என்னுடன் பேச நான் மாடியில் இருந்து முனைகின்றேன். ஆனால் அவர்கள் மந்திரித்த ஆடு போல் எங்கும் அசையாது யாருக்கும் செவிமடுக்காது அப்படியே அசையாது இருந்தார்கள்.

### சபை நடவடிக்கை தொடங்கியது.

அப்போது TMVP உறுப்பினர்கள் ரகசிய வாக்கெடுப்பை கோரினார்கள். அதனை கூட்டமைப்பு எதிர்த்தது. அப்பொழுது வாக்கெடுப்பு இரகசிய வாக்கெடுப்பா அல்லது திறந்த வாக்கெடுப்பா என்பதனை வாக்கெடுப்புக்கு விடுமாறு மாகாண ஆணையாளர் அறிவித்தார். வாக்கெடுப்பின் போது ஒன்றோ அல்லது இரண்டு பேர் நடுநிலை வகித்தார்கள். வாக்கெடுப்பு அந்தநேரத்தில் அந்தரத்தில் தொங்கியது. தமிழ் தேசிய கூட்டமைப்பு தோற்கப்போகிறது என்ற நிலை அப்போது தோன்றியது. கயிறு இழுத்தல் போட்டியில் கடைசி கட்டத்தில் இருபக்கமும் சமனான விசை பாவிக்கும் போது அந்த கயிறு எப்படி மத்திய கோட்டில் நிற்குமோ இரு சராரும் இரு பக்கம் நின்று பலமிக இழுப்பார்களோ அப்படி ஒரு நிலை இருந்தது. ரகசிய வாக்கெடுப்புக்கு கட்சி மாறிய இரண்டு ஐ.தே.கட்சி ஆதரவாளர்களும் TMVP கோரிய ரகசிய வாக்கெடுப்புக்கு ஆதரவாக கை உயர்த்தினர். அந்த இடத்தில் பல்கணியில் (மேல் மாடியில்) இருந்த நான் கட்சி மாறிய அந்த நபர்களை நோக்கி எழுந்து நின்று ...(தணிக்கை) கூறியவாறு பலமாக சத்தமிட்டேன்.

அருகில் இருந்த ஸ்ரீநேசன், ஜனா, அரியம், துரைராஜசிங்கம் ஆகியோர் என்னை அமைதிப்படுத்தினார்கள். எதுவானாலும் நடக்கட்டும் பார்க்கலாம் அதற்காக சபை ஒழுக்கத்தை மீறக்கூடாது அமைதியை கடைப்பிடியுங்கள் என்றார்கள்.

★கழுத்தில் கயிறு இறுகும் நிலையிலும் சபை ஒழுக்கத்தை தமிழ் தேசிய கூட்டமைப்பு அந்த இடத்தில் மீற என்னை விடவில்லை. ஆனால் கூட்டமைப்பில் சிலரிடம் அந்த பண்பு இன்று இல்லை.★ அடுத்த நடவடிக்கைக்காக சபையில் சிறிய நேர இடைவெளி நிலவியது. இதனிடையே மண்டபத்துக்கு வெளியே சில அதிரடியான செயற்பாடுகள் நடந்து முடிந்துவிட்டது. அவ்வேளை வாக்களிப்பு மண்டபத்துக்குள் இருந்த எனது ஊடகவியலாளர் நண்பர் ஒருவரை கைத்தொலைபேசியில் தொடர்பு கொண்டு விடயத்தை கூறியதும் அவர் அவரது கைத்தொலைபேசியை கட்சி மாறிய ஐ.தே. கட்சி உறுப்பினரிடம் கொடுத்தார். அந்த அழைப்பு பலர் இணைந்து இருக்கும் கூட்டு அழைப்பாக இருந்தது Conference Call மூலம் விடயம் கட்சி மாறிய இருவரிடமும் பரிமாறப்பட்டது. உடனே கட்சி மாறிய அந்த உறுப்பினரில் ஒருவர் எழுந்து நின்று ஐயோ என்னையும், என் குடும்பத்தையும் கொலை செய்யப்போகிறார்கள் என்று ஓலமிட்டார். உடனே குறுக்கிட்ட கிழக்குமாகாண ஊராட்சி ஆணையாளர் அவரை நோக்கி யார் என்று கேட்டார் அவர் மாடியில் இருந்த என்னை மேல் நோக்கி காட்டினார். ஆணையாளர் குறித்த நபரிடம் மேலே பார்க்காமல் கீழே பாருங்கள் என்றார் சபை சற்று நேரம் சிரிப்பால் களை கட்டியது.

குறித்த இருவரையும் அந்த சம்பவம் (தணிக்கை) தெறிக்க விட்டது. மறுமுறையும் தொலைபேசி அழைப்பு அவர்களுக்காக காத்து இருந்தது. அவர்கள் இருவரும் பேசி விட்டு என்னை ஒரு கணம் பார்த்தார்கள். சற்று நேரத்தில் மீண்டும் வாக்கெடுப்பு நடந்தது தமிழ் தேசிய கூட்டமைப்பு மட்டக்களப்பு மாநகர சபையை கைப்பற்றியது.

தமிழ் அரசு கட்சி செயலாளர் துரைராஜசிங்கம் அப்படி என்னதான் தொலைபேசியில் பேசப்பட்டது என என்னிடம் கேட்டார். நான் மௌனமாக சிரித்து விட்டு அவரை கடந்து சென்றேன்.

முற்றும்.

க.மோகன்
தலைவர்
தமிழ் உணர்வாளர்கள் அமைப்பு

